ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

11.01.2012 - மலர் 08, இதழ் 45

## பொங்கல் தினம் வந்தது மகிழ்வில் மனம் உவந்தது




## கழிந்த வருடத்தில் பதிந்த நிகழ்வுகள்

விலை ரூபா 15/-

விஜய்
ரூபா 6½ லட்சம் பெறுமதியான வவுச்சர்களை வெல்லவும் 10% விலைக்கழிவையும் பெறுவதற்கான சந்தர்ப்பம்....
Bata
B.first
SCHOOL SHOES

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோல்வியை ஏற்றுக்கொண்ட ஒல்லாந்தர்

ஒல்லாந்தர்களின் பொருட் களஞ்சியங்களில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாத பெருந் தொகையான பொருட்கள் எஞ்சியிருந்தன. அதன் பெறுமதி இருபத்தைந்து லட்சம் என கணிப்பிட் டனர். இவ்வேளையில் ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் வருமானமோ, மிக மோசமாக வீழ்ச்சி அடைந்திருந்தது. அங்கே சேவை புரிந்தோருக்கு பல மாதங்களாக ஊதியம் வழங்கப்பட வில்லை. அதுமட்டுமன்றி; ஒல்லாந்த வர்த் தக சங்கம், தாம் பெற்ற கடன் களைக்கூட திருப்பிச் செலுத்த முடியாமல் மிகவும் பின்னடை வான ஒரு நிலையில் இருந்தது.

இதற்கிடையில் இந்திய, முஸ்லிம் மற்றும் நம் நாட்டுப் படையினர் பலர் ராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றனர். இதேவேளை, கண்டி ராச்சியத்தின் எல்லையில் கண்டிப் படையினர் தயார் நிலையில் இருந்தனர். இத்தகைய காரணங்களால் மூன்று நாட்களுக்கு மேல் கோட்டையைப் பாதுகாக்க ஒல்லாந்தரால் முடியவில்லை. போரிடாமல் கோட் டையைக் கையளிக்க வேண்டிய நிலை இருப்பதால், ஆங்கிலேயரின் பல்வேறு ஒப்பந்தங்களுக்கு அடிபணிய நேரிட்டது. அவ்வாறு கையளிக்காமல் இருந்தால் ஆங்கிலேயரின் கடுமையான தாக்குதல்களின்பின் அவர்களின் ஆயுத நிர்ப்பந்தத்தின்கீழ், கோட்டையைக் கையளிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது யுத்தம் செய்யாமல் அடிபணிவதே சிறந்தது என ஒல்லாந்தர் தீர்மானித்தனர்.

இத்தகைய நிலையில் ஆங்கிலேயர் தமது எதிரிகளாகத் திகழ்ந்த ஒல்லாந்தருக்கு மிகுந்த சலுகைகளை வழங்கினர். சகல ஒல்லாந்த பிரதானி களும் சென்னை அரசாங்கத்தின் ஆணையின்படி, தத்தமக்குரிய சொத்துக்களுடன் இலங்கையில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர்களில் யாராவது இலங்கையில் இருந்து வெளியேற விரும்பினால், தீர்வை வரி செலுத்தாமல் பொருட் களைக்கொண்டு செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன், கைது செய்யப்படும் ஒல்லாந் தப் படைவீரர்களை எவ்வித தீங்கும் இன்றி சென்னைக்கு அனுப்பவும் ஆங்கிலேயர் தீர்மானித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ/தரப் பரீட்சை விடைத்தாள்:

# மீள்திருத்தத்திற்கான விண்ணப்ப காலம் ஜனவரி 17 வரை நீடிப்பு

2011 ஆம் ஆண்டிற்கான க.பொ.த.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீள்திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் காலம் இம்மாதம் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

மீள்திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் ஜனவரி 8 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், தற்போது அது 17 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீள்திருத்தத்திற்காக, இம்முறை அதிகளவிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற வண்ணம் இருப்பதாக பரீட்சைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# நிபுணத்துவம் மிக்க சந்ததியினரை உருவாக்குவதற்கான வேலைத்திட்டம் அமுலில்...

தேசிய அடையாளத்தை சர்வதேசத்துக்கு கொண்டுசெல்லும் வல்லமை மிக்க ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பண்பாடு ஆகிய கூறுகளின் ஒன்றிணைப்புடன் மாணவர்களுக்கு கல்வி வழங்கப்பட்டு வருவதாக கல்வித்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஹொரணையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்: மாணவர்களைப் பரீட்சை மையக் கல்வி முறைமைக்குப் பழக்கப்படுத்துவதைவிட, சகல துறைகளிலும் முழு நிறைவு பெற்ற-உலகிற்குப் பொருத்தமான மனித வளத்தினராக அவர்களை உருவாக்குவதே, அரசின் எதிர்பார்ப்பாகும். ஆகவே, மாணவர்களின் திறமையைக் கண்டறிந்து அவர்களை முழுமையான நிபுணத்துவம் மிக்கவர்களாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்குரியது என்றார்.

ஆங்கிலம் மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகள், கணிதம், அறிவியல், தகவல் தொழில்நுட்பம், அழகியல், விளையாட்டு ஆகிய பாடத் துறைகளில் மாணவர்களின் கவனத்தைச் செலுத்துவதனூடாக, அவர்களை சகல துறைகளிலும் சிறந்தவர்களாகச் செய்து, நிபுணத்துவம் மிக்க எதிர்காலச் சந்ததியினராக அவர்களை உருவாக்க முடியும். இதற்குத் தேவையான வேலைத்திட்டங்கள் தற்போதளவில் நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பாடசாலை சிற்றுண்டிச்சாலை உணவுகளால் ஆரோக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படும் நிலை



## பலர் விசனம்

மேல் மாகாணத்திற்கு உட்பட்ட ஏராளமான பாடசாலைகளிலுள்ள சிற்றுண்டிச்சாலைகள் உரிய தரத்தில் இல்லை என பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் விற்பனை செய்யத் தடைசெய்யப்பட்டுள்ள பல்வேறு வகையான உணவுகள் மற்றும் பானங்கள் அங்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், மேலும் சில பாடசாலைகளில் மலசலகூடங்கள் போன்ற அசுத்தமான இடங்களுக்கு அருகில் சிற்றுண்டிச்சாலைகள் இயங்கி வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை எந்தவொரு தீர்வும் எடுக்கப்படவில்லையென மேலும் அறியக்கிடைக்கின்றது.

## 'விஜய்'அட்டையில் வாசகர் முகம்

'விஜய்' அட்டைப்படத்தில் இடம்பெறுவதற்கு விண்ணப்பித்து ஏராளமானவர்கள் தமது புகைப்படத்தை அனுப்பியிருந்தனர். ஆர்வத்திற்கு பாராட்டுக்கள். இவற்றிலிருந்து சிறந்த பத்து படங்களே பிரசுரத்திற்காகத் தெரிவுசெய்யப்படும் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தோம். ஆனால், அதிகப்படியானவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்குமுகமாக பத்து புகைப்படங்களுக்குப் பதிலாக இருபது புகைப்படங்களை தெரிவுசெய்வதற்குத் தீர்மானித்துள்ளோம். அதற்கிணங்க, பிரசுரத்திற்குத் தகுதியும் தரமும் தெளிவும் கொண்ட அட்டைப்படத்திற்குப் பொருத்தமான புகைப்படங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு வாரமும் 'விஜய்' அட்டைப்படத்தில் ஒரு பகுதியில் பிரசுரமாகும். அதன்படி, அடுத்த வாரம் தொடக்கம் 'வாசகர் முகம்' காட்டும் அட்டைப்படத்துடனான 'விஜய்' பத்திரிகையை எதிர்பாருங்கள்.

(ஆசிரியர்)

உ/தரப் பரீட்சை பெறுபேறுகள்:

# குளறுபடிகள் தொடர்பான விபரங்களை ஃபெக்ஸ்மூலம் அறிவிக்கலாம்



க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளைப் பற்றி ஆராய, நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவானது, பெறுபேறுகளில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் தொடர்பான விபரங்களை மாணவர்கள் அறிவிப்பதற்காக ஃபெக்ஸ் இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கமைய, 011-2372280 என்ற ஃபெக்ஸ் இலக்கத்தினூடாக, மாணவர்கள் தமது உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் தொடர்பில் அறியத்தரலாம் என பரீட்சைக் குளறுபடிகள் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவின் தலைவரும் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிகள் அமைச்சின் செயலாளருமான தாரா விஜேதிலக தெரிவித்துள்ளார்.

G.C.E. O/L இன் பின் உங்கள் அடுத்த இலக்கு என்ன? கல்வியை தொடர்வதா ? அல்லது தொழிலா?
இரண்டு துறைக்கும் ஆங்கில அறிவு தேவையல்லவா? இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்
30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
மேலதிக விபரங்களுக்கு
பெயர் / முகவரியை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படும்
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
ஆகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று . Video CD வழிகாட்டி புத்தகம்
ஆகிய பேக் (BAG) இலவசம். அடையாள அட்டை Diploma in English
சான்றிதழ் ஒன்று என்பன எல்லோருக்கும் வழங்கப்படும்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-2227711 / 0773 123 523


அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க பலவருட காலமாக சிங்கள மொழியில் 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்றுத்தந்த "சதர" நிறுவனத்தின் முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்களின் தமிழ் மொழிபெயர்ப்பான சதர புலமைப்பரிசில் வெற்றி வழி காட்டி
இதோ வெளிவந்து விட்டது
5 புலமைப்பரிசில்
சதர புலமைப்பரிசில் வெற்றி வழி

பகுதி I, II உத்தேச வினாப்பத்திரங்க - ள் 15 விடைகளுடன் உள்ளடக்கிய "சதர புலமைப்பரிசில் வெற்றிவழி காட்டி" வெளிவந்துள்ளது
வாங்குங்கள் - வாசியுங்கள் அறியுங்கள் - வெற்றி பெறுங்கள் சதர
122, Awissawella Road, Maharagama.
Tel - 011 2850981, 7394141, Fax - 2846256

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'மனம்' என்பது சரியான முறையில் அமைந்தால் தான் அனைத்துக் காரியங்களும் சரிவர நடைபெறும். அந்த வகையில், மனதை சீர்கெடுக்கும் ஒன்றாக 'மன உளைச்சல்' (Mental Tension) காணப் படுகின்றது



# கல்வி

## முகாமைத்துவம் - 89

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# மன உளைச்சல் கல்வியைப் பாதிக்கும்

'மன உளைச்சல்' என்பது; ஆதங்கம், ஆதங்க நிலை, அச்ச உணர்வு, மனதின் இறுக்க நிலை போன்றவற்றின் உள்ளடக்கமேயாகும். எமக்குப் பிரச்சினைகள் ஏற்படுமாயின், நாம் இவ்வாறான மன உளைச்சல் நிலைகளுக்குத் தள்ளப்படுவோம்.

மனிதனின் இலக்கு முழுவதும் ஏதாவது ஒரு தேவையை மையமாகக்கொண்டே நிர்ணயிக் கப்படுகிறது. தேவை நிறைவேறாத சந்தர்ப்பத் தில், மனிதன் மன உளைச்சலுக்கு அடிமைப் பட்டு விடும் நிலை காணப்படுகின்றது. இந்த மன உளைச்சல் பொதுவாக அனைவருக்குமே ஏற்படக்கூடியது. இது அவர்களின் செயற்பாடு களையும் பாதிக்கக்கூடியது. மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் மன உளைச்ச லுக்கு ஆளாயின், அது அவர்களின் கல்வியில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இத்தகைய மன உளைச்சலுக்குள்ளாகி இருக் கும் மாணவர்கள் பாடசாலையில்,



வீட்டில் அல்லது ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பீதி, நடுக்கம், கவலை போன்ற உணர்வு களில் அதிகம் மூழ் கியிருப்பர். எனினும், இந்த நிலையானது, மாணவர்கள் மத்தியில் மறைமுகமான தாக் கத்தை ஏற்படுத்துகின்றது.



மன உளைச்சல் எமது கண்ணுக்குப் புலப்படா விட்டாலும், அது மனதுக்குள் ஒரு போராட் டத்தை நிகழ்த்திக்கொண்டே இருக்கும். இது பல செயற்பாடுகளில் எம்மை அறியாமலேயே வெளிப்படும். அந்தவகையில்; எதற்கெடுத்தா லும் அழுதல், கோபம் கொள்ளல், உறுதியற்ற மனநிலை, மன ஒருமைப்பாடு குறைதல், ஒய்வாக இருக்க முடியாமை, களைப்பு, தலையிடி, பசியின்மை, நித்திரைக் குறைபாடு, சந்தேகம், வாக்குவாதம் புரிதல் என இதன் விளைவுகளை நாம் அடுக்கிக்கொண்டே போகலாம். இவ்வாறான விளைவுகள் மிகவும் ஆபத்துக்குரியவையாகும். எனவே, உடல் மட்டும் ஆரோக்கியமாக இருப் பதனால் மட்டும் நாம் சிறப்பாக கல்வி யைக் கற்றிட முடியாது; அதனோடு, உளச் சுகாதாரமும் மிக அவசியமாகின்றது.

நாம் உடலையும் உள்ளத்தையும் வேறுபடுத்தி நோக்கினாலும் கல்வி கற்கும் மாணவர்களைப் பொறுத்த வரையில், அவை இரண்டும் பொது வானவையாகும். அதாவது, நாம் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டாமல் இருந்தால், எவ்வாறு நோய்வாய்ப்படுவோமோ அது போன்றே, உள்ளம் ஆரோக்கியமாக இல்லாவிட்டாலும் நாம் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பங்கள் மிக அதிகமாகும். இதனால், சிந்தனைகளை சரிவரச் செய்வதாலும் சிந்தனையால் மேலும் முயற்சி செய்வதாலும் மன உளைச்சலில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அத்துடன், ''நான் ஏன் இந்த மன உளைச்சலுக்கு ஆளாகினேன்?'' என வினா எழுப்பினால், விடையும் எம்மில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம். எனவே, எந்த சூழ்நிலையின்போதும் மனதைப் பக்குவ நிலைக்குள் வைத்திருக்க வேண்டும். இதற்கு யோகாசனம், தியானம், வணக்க வழிபாடுகள், பிரார்த்தனைகள், மனதை ஒருநிலைப்படுத்தல், நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல், மன உறுதி போன்றவை அவசியமாகின்றன.

ஆகவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மன உளைச்சலுக்கு ஆளாகாமல் எமது குறிக்கோளை அடைந்துகொள்வதை மாத்திரம் நோக்காகக் கொண்டு சரியாக அதனை ஒழுங்குபடுத்தி வாழ்க்கையில் வெற்றிபெற முயற்சி செய்வோம்!

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**



# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



எம். அஸ்பாக், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கு/ஹிஸ்புள்ளாஹ் மத்திய கல்லூரி மாணவனான இவர், அன்ஸார்-ரிஸ்வானா தம்பதியரின் புதல்வராவார்.



தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான எஸ்.ஜௌஹி, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சக்கீன்-ஜஸ்லினா தம்பதியரின் புதல்வியாவார்.



தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான என்.சுக்றா, 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நக்கீப்-ஜனூசியா தம்பதியரின் புதல்வியாவார்.



எஃப்.அம்னா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான இவர், மாஹிர்-பர்வின் தம்பதியரின் புதல்வியாவார்.



குளி/மடிகே அனுக்கனை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவனான ஜே.ராஸிம், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



குளி/மடிகே அனுக்கனை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான றுஷ்தா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க/ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் எம்.ராஷிட், 178 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரியால்டீன்-நய்மா தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.இமாரா, 174 புள்ளிகளைப் பெற்றுள்ளார். க/ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவியான இவர், இர்ஷாட்-பரீனா தம்பதியரின் புதல்வியாவார்.



க/இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி மாணவனான மு.விதுசயன், 189 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாண வியான எஃப்.மினால், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜிப்ரி-முனவ்வரா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.இஸ்ஹாக், 157 புள்ளிகளைப் பெற் றுள்ளார். களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவ னான இவர், ஸப்ரி-பின்திஹா தம்பதியரின் புதல்வராவா[r]



களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாண வியான எஃப்.நுப்தா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மகீ-ஸுஹைறா தம்பதி யரின் புதல்வியாவார்.



கொ/கைரியா மு.ம. ம.வித்தியாலய மாண வியான எம்.மபாஸா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மௌலானா-மபூஸா தம்பதியரின் புதல்வியாவார்.



மாவ/நூரானியா மு.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.நாஸிக், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவ[ர்], நஸார்-சியானா தம்பதியரின் புதல்வராவார்.



நாப்பாவனை முஸ்லிம் மகா வித்தி யாலயத்தைச் சேர்ந்த எம்.யாஸிர், 159 புள்ளிகளைப் பெற் றுள்ளார். இவர், தமீம்-நஸ்ரியா தம்பதியரின் புதல்வராவார்.



குருவிட்ட ஸாஹிரா வித்தியாலய மாணவர்கள் தமது அதிபர் எம்.அக்ரம் மற்றும் வகுப்பாசிரியை எஸ்.சல்மா ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். மாணவர்களின் விபரங்கள் வருமாறு: எம்.ஹப்லான் (166 புள்ளிகள்), பி.அப்துல்லாஹ் (150 புள்ளிகள்), எம்.பாசில் (151 புள்ளிகள்), எஃப்.ஹப்ஸா (157 புள்ளிகள்), என்.பர்வின் (153 புள்ளிகள்), எம்.சஸ்னி (163 புள்ளிகள்), எம்.இன்சாப் (157 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு நாட்கள் தொடரும் விழா

1. போகி
2. தைப்பொங்கல்
3. மாட்டுப்பொங்கல்
4. காணும் பொங்கல் என நான்கு நாட்கள் பொங்கல் விழா தொடர்கின்றது.

**1. போகி:** போகி தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று, அதாவது, பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுகின்றது. அந்நாளில் வீட்டில் இருக்கும் தேவையற்ற பொருட்கள், குப்பைகள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டு, வீட்டிற்கு வர்ணப்பூச்சு பூசப்பட்டு வீட்டைச் சுத்தப்படுத்தி, அழகுபடுத்துகிறார்கள். வீடு மட்டுமல்ல; மனதில் இருக்கும் தீய எண்ணங்களும் தவறான நோக்கங்களும் இவ்வாறு நீக்கப்பட வேண்டும் என்பதே இதன் தத்துவமாகும்.

**2. தைப்பொங்கல்:** பொங்கல் விழா, மக்களால் மிகச் சிறப்பாகவே கொண்டாடப்படுகிறது. உழைக்கும் உழவர் பெருமக்கள் தாமே கண்டுணர்ந்த தமது உழைப்பிற்கு உதவிய இயற்கை சக்திகளுக்கும் தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவே கொண்டாடப்படுகிறது. உழவர்கள் சூரியபகவானின் உதவியால் தாம் உழைத்துச் சேர்த்த நெல்லை வீட்டிற்கு எடுத்து வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் இனிய நாளே தைப்பொங்கல் திருநாள் என்றும் கூறப்படுகிறது.

**3. மாட்டுப்பொங்கல்:** மாட்டுப்பொங்கல் என்பது தைப் பொங்கல் நாளின் மறுநாள் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை, இது 'பட்டிப் பொங்கல்' என்றும் அழைக்கப்படுகின்றது. அன்றைய நாளில் மாடுகள் கட்டும் பட்டி அல்லது தொழுவத்தினைச் சுத்தம் செய்து, கால்நடைகளைக் குளிப்பாட்டி, அவற்றுக்கு திருநீறு பூசி குங்குமம் இடுவர். விவசாயத்திற்கு பயன்படும் அனைத்து உழவுக் கருவிகளும் கழுவி சுத்தமாக்கப்பட்டு, திருநீறு குங்குமம் இடப்பட்டு, தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டுப்பட்டு, பின்னர் கால்நடைகளுக்கும் பொங்கல் பழம் என்பவற்றை உண்ணக்கொடுப்பர்.

**4. காணும் பொங்கல்:** காணும் பொங்கல் என்பது பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காவது நாள் விழா ஆகும். காணும் பொங்கலன்று, உற்றார் உறவினர், நண்பர்களை காணுதல் மற்றும் பெரியோரிடம் ஆசீர்வாதம் பெறல் என்பன இந்நாளில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், வழுக்கு மரம் ஏறல், காளை அடக்குதல் போன்ற வீர சாகசப் போட்டிகளும் நடைபெறும்.







# தைத்திருநாள் இல்லமெல்லாம் தளிர்த்திடும் தைப்பொங்கல்

**தை**ப்பொங்கல் திருநாளானது, உழவர் திருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் காத்திடும் சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே இத்திருநாள் இந்துக்களால் கொண்டாடப்படுகின்றது. இது தமிழர் திருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த விழாவானது, மதச் சார்பற்ற ஓர் இனத்தின் விழாவாகவே அமைகின்றது. பொதுவாக, இந்து மத விழாக்கள் அனைத்திற்கும் அடிப்படையாக ஒரு புராணக்கதை இருக்கும். அது ஒரு கடவுளையோ அல்லது அரக்கனையோ மையப்படுத்தி அமைந்திருக்கும். ஆனால், தைப்பொங்கல் விழா அனைத்து ஜீவராசிகளும் உயிர்வாழ அவசியமான சூரிய பகவானை அடிப்படையாகக்கொண்டு கொண்டாடப்படுவதால், இது ஒரு மதம் சார்ந்த விழா அல்ல என்றும் கூறலாம்.

தைப்பொங்கல் விழாவானது, சங்ககாலம்தொட்டே கொண்டாடப்பட்டு வருகின்றது. கி.மு 200 ஆம் நூற்றாண்டிலேயே தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டு வந்தமைக்கான வரலாற்று சான்றுகள் காணப்பட்டபோதிலும், எப்போது இந்த வழக்கம் ஆரம்பமானது என்பதற்கான தெளிவான சான்றுகள் இல்லையென்றே கூறலாம்.

இத்திருநாளானது, சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் மகிழ்ச்சிகரமான கொண்டாட்டமாகும். உழவுத்தொழிலுக்கு மிகவும் அவசியமான, சூரிய ஒளியின் முக்கியத்துவத்தை ஆதிகாலத்திலேயே தமது மெய்ஞானத்தினால் உணர்ந்த நமது மூதாதையர்கள் தை முதலாம் திகதியை சூரிய பகவானிற்கு விழா எடுப்பதற்கு உகந்த நாளாகக் கொண்டனர். தை முதலாம் திகதியை தேர்ந்தெடுப்பதற்கான காரணம், தை முதலாம் திகதி சூரிய பகவான் மகர ரேகையிலிருந்து கடக ரேகையை நோக்கி நகர ஆரம்பித்து, ஆனி மாத இறுதியில் கடக ரேகையை வந்தடைவதேயாகும். இந்த ஆறு மாதகாலம் 'உத்தராயண காலம்' எனப்படுகின்றது. பின்னர் ஆடி மாதம் முதலாம் திகதி, கடக ரேகையிலிருந்து மகர ரேகையை மார்கழி மாத இறுதியில் மீண்டும் வந்தடைவார். இந்த ஆறுமாத காலம் 'தட்சிணாயன காலம்' எனப்படுகின்றது. உத்தராயண காலம் என்பது பகல் பொழுதும் தட்சிணாயன காலம் என்பது இரவுப் பொழுதுமாகும். இந்தப் பகல் பொழுதின் ஆரம்பமே தை முதலாம் திகதியாகும்.

அதாவது, ஜனவரி 14 அல்லது 15 ஆம் திகதியாகும். இந்தத் திகதி மாற்றத்தில் சிறு குழப்பம் ஏற்படலாம். ஒருசில வருடங்களில் ஜனவரி 14 ஆம் திகதியும் ஒருசில வருடங்களில் ஜனவரி 15 ஆம் திகதியும் தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகின்றது. இதற்கான காரணம் லீப் வருடத்தின் எண்ணிக்கையாகும். அந்த வகையில் இவ்வருடம் ஜனவரி 15 ஆம் திகதி தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது.

தைப்பொங்கல் திருநாளன்று, அறுவடையில் எடுத்த புதிய அரிசியைப் புதுப்பானையில் இட்டு மா இலையுடன்கூடிய மஞ்சள் கொத்துக் கட்டி, வீட்டு முற்றத்தில் கோலம் இட்டு, அதனருகில் மண் அடுப்பிட்டு பொங்கலிடுவர். அதேபோன்று வீட்டு வாசற்படியிலும் மாவிலை தோரணங்கள் கட்டிடுவர். இதன் நோக்கம் குடும்பமானது, சீரும் சிறப்புமாக மென்மேலும் தலைத்தோங்க வேண்டும் என்பதற்காகவேயாகும். நமது நாட்டில் சூரிய உதய வேளையிலேயே பொங்கல் பொங்கி வழிய வேண்டும் என்று கணக்கிடுவர். இந்தியா போன்ற நாடுகளில் பொங்கல் பொங்குவதற்கென நல்ல நேரம் பார்த்துப் பொங்கலிடுவர். பொங்கல் பொங்கி வழியும் திசைகளிலும் பலவிதமான ஐதீகக் கதைகள் உள்ளன. அதாவது, கிழக்குப் பக்கமாக வழிந்தால் புகழ், மேற்கு-ஆயுள், வடக்கு-செல்வம், தெற்கு-ஆகாது என்றும் நம்பப்படுகின்றது.

*'அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்'*

-உமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்படும் மக்களின் துயரத்தைக் கூற வார்த்தைகள் கிடைப்பதில்லை. உறங்க இடமின்றி, உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றி, அவர்கள் படும் வேதனைகள் அளவிட முடியாதவையாகவே காணப்படும். இவ்வாறான அனர்த்தங்களுக்கு மனிதர்களின் தவறான செயற்பாடுகளே முக்கிய காரணங்களாகின்றன. இயற்கைச் சூழலுக்கு இடர் விளைவித்து, மக்கள் வாழ்விற்கு துன்பம் விளைவிக்கும் இவ்வாறான செயற்பாடுகளை மேலும் மேலும் ஊக்குவிக்காது, மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் இத்தகைய பேரழிவுகளைத் தடுத்து நிறுத்தல் நாம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகவே உள்ளது

# வெள்ளப்பெ
# ஏற்படும் வி



## வெள்ளம் எவ்வாறு ஏற்படுகின்றது?

வெள்ளம் என்பது நிலம், வீடுகள், கட்டடங்களை மூழ்கடிக்குமள விற்கு தேங்கிநிற்கும் அல்லது பாய்ந்தோடும் நீர் எனலாம். ஆறு அல்லது ஏரி போன்ற நீர்நிலைக ளில் உள்ள நீரின் மட்டம் அதிகரிக் கும்போது அல்லது அதன் அணை கள் உடையும்போது, நீரோட்டத்தின் வலிமையானது, மிகவும் அதிகரிக் கின்றது. அவ்வாறு பெருக்கெடுத்து ஓடும் நீரானது, கரையோரங்களில் அமைந்துள்ள வீடுகள், கட்டடங் களை அதிகளவில் சேதப்படுத்து கின்றது. இத்தகைய வெள்ளப் பெருக்கின் முக்கிய வகைகளாவன;

*** கரையோர வெள்ளப் பெருக்கு:**

தொடர்ச்சியாகப் பெய்யும் பெரு மழை அல்லது பனி உருகுதலின் வேக அதிகரிப்பு காரணமாக, கரையோர வெள்ளம் ஏற்படுகின் றது. பருவக் காற்றினால் உண்டா கும் கனமழை, புயல் மற்றும் காற்ற ழுத்தங்கள் ஆகியவை இதற்கான ஏனைய காரணங்களாகும். எதிர்பா ராத தடங்கல்களான நிலச்சரிவு, பனிப்பாறைகள் அல்லது இடிபாடு கள் போன்றவை இந்த வெள்ளத் தின் போக்கை சிறிதளவு கட்டுப் படுத்துகின்றன.

*** திடீர்வெள்ளப்பெருக்கு:**

இடியுடன்கூடிய பெருமழை அல்லது நீர்த்தேக்கங்களில் அணை கள் உடைவது, நிலச்சரிவு மற்றும் பனியாறு ஆகியவை திடீர் வெள் ளத்திற்கான காரணிகளாகும்.

## ஆற்றின் நிலை

ஆறுகளை அவற்றின் இயல்புத் தன்மைகளுக்கேற்ப இளமை, முதிர்ச்சி, அதிமுதிர்ச்சி நிலைகள் என மூன்று வகைகளாகப் பிரிக்க லாம். ஆறு, தனது இளமை நிலை யில் மிக வேகமாகப் பாய்ந்து செல் கின்றது. அதன்போது நிலமானது, சாய்வு நில ஓட்டமாகக் காணப்படும். அதன் கனவளவும் குறைவாகும்.

நதி காவிச்செல்லும் பருபொருட்கள் மிகவும் குறைவாக இருப்பதோடு, கரடுமுரடான தன்மையையும் கொண்டிருக்கும். அதேநேரம், ஆறு தனது முதிர்ச்சி நிலை யின்போது, நில ஓட்டங்கள் நடுநில ஓட்டமாக இருக்கும். இது அதிக கனவளவைக் கொண்டி ருப்பதோடு, அதன் சுமையும் அதிகமாகக் காணப்படும். மேலும், ஆற்றின் ஆழம் குறைந்து அகலம் அதிகரிப்பதால் ஆற்றின் வேகம் சற்றுக் குறைவடையும்.

ஓர் ஆற்றில் அதிகளவு நீர் பெருகு வது அதன் அதிமுதிர்ச்சி நிலையி லேயே தங்கியுள்ளது.

இத்தகைய அதிமுதிர்ச்சி நிலை யில் நீரினால் காவி வரப்படும் பொருட்கள் ஆற்றின் இருமருங் கிலும் தேங்கி நிற்பதால், ஆறு எழுச்சியுற்றுப் பாய்ந்து வெள்ள நிலையை ஏற்படுத்துகின்றது. ஆழம் குறைவின் காரணமாக, பொங்கி வரும் நீருக்கு உறைவிடம் இன்மையால் இந்நிலை ஏற்படுகின் றது. இவ்வாறாகத்தான் ஓர் ஆற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு இயல்பு நிலைகளிலும் வெள்ளம் ஏற்படும் நிலை உருவா கின்றது.



## நகரங்களின் வடிகால்களிலுள்ள அடைப்பு

இத்தகைய அடைப்புகள் அதிகமான மக்கள் வாழிடங்களி லும் நகரங்களிலும் காணப்படுகின் றன. இந்த அடைப்பு வடிகால்களில் கழிவுப்பொருட்கள் சேர்வதாலேயே, ஏற்படுகின்றது. கழிவுப் பொருட் கள் மற்றும் குப்பைகளை சிறந்த முறையில் அகற்றுவதன்மூலம் இவ்வாறான அடைப்புகள் ஏற்ப டாமல் பாதுகாக்கலாம். அத்துடன், வடிகால் சேதமடைவதாலும், மழைநீர் தேங்கி வெள்ளம் ஏற்படக் காரணமாகின்றது.

2010 நொவெம்பர் மாதம் சில மணித்தியாலங்கள் பெய்த மழை யின் பின்னர் 440 மில்லிமீற்றர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## வான் கதவுகள் திறக்கப்பட்டதால் ஆற்று நீரின் மட்டம் அதிகரித்தல்

கடந்த சில மாதங்களில் பாரிய மழை வீழ்ச்சி ஏற்பட்டமையால், பொலன்னறுவை சோமாவதி, ரன்தெம்பே, மாத்தளை ஆகிய பிரதேசங்களிலுள்ள வாவிகள் நிரம்பி வழிந்தன. இதன் காரண மாக, வான் கதவுகள் திறந்துவிடப் பட்டன. பாரிய நீர்ப்பெருக்கு அதிவேகத்துடன் வாவியின் ...ழ்ப் பகுதியை மூழ்கடித்து நிரம்பி வழிந் தது. மேற்கண்ட நிலைகள் யாவும் வெள்ளம் ஏற்பட ஏதுவாக அமை கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருக்கினால் ளைவுகள்



மணல் மூட்டைகளும் பயன்படுத்தப்படுகிறது. கிராமங்களில் உள்ள ஆறுகள் மற்றும் நகரங்களிலுள்ள வடிகால்களில் கழிவுப்பொருட்கள் சேர்வதைத் தடுப்பதன்மூலம் வெள்ளப்பெருக்கினைப் பெரிதும் கட்டுப்படுத்தலாம். தவறான மனித செயற்பாடுகளான ஆற்றில் மணல் எடுத்தல், காடழித்தல், மாணிக்கக்கற்கள் அகழ்தல், சூழலை மாசுபடுத்தல் போன்ற செயற்பாடுகளைக் குறைப்பதன் மூலமும் வெள்ளப்பெருக்கில் இருந்து பாதுகாப்படையலாம். சூழல் மாசடைவதாலும் சூழல் சமநிலை அற்றுப்போதலுமே இத்தகைய காலநிலை பருவ மாற்றங்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களாகின்றன.

60 வருடங்களுக்குப் பின்னரே அதாவது 2010 ஆம் ஆண்டு மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இத்தகைய வெள்ளப்பெருக்கை முற்றிலும் தடுப்பது சிரமமான விடையமாக இருப்பினும், அதன் பாதிப்புகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் பின்வருமாறு அமைகின்றன.

- வடிகால்களை புனரமைப்பு செய்தல்
- நீரைக் கட்டுப்படுத்த வான் கதவுகளை அமைத்தல்
- கரையோரத்தில் காணப்படும் குடியிருப்புகளை அகற்றுதல்
- கரையோரங்களில் மதகுகளை அமைத்தல்
- வர்த்தகக் கட்டடங்களை நகர்ப்புறங்களுக்கு மாற்றியமைத்தல்.
- காடழிப்பு, மணல் அகழ்தல், மாணிக்கக் கல் அகழ்தலைக் குறைத்தல்

## அதிக வெள்ளப்பெருக்கு ஏற்படும் மாவட்டங்கள்



இரத்தினபுரி (ஆற்றுப்பகுதி),
களுத்துறை, கொழும்பு (களனி ஆறு),
திருகோணமலை (மகாவலி ஆறு)
திருகோணமலை (மழைநீர்),
மட்டக்களப்பு, அம்பாறை, காலி (ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் பகுதிகளில்) மாத்தறை.

## வெள்ளப்பெருக்கின் அளவு

5-8 அடிகள் வரை சிறுவெள்ளம்
8-11 அடிகள் வரை பெருவெள்ளம்
11 அடிகளுக்கும் மேல் ஆபத்தான வெள்ளம்

## முன்னேற்பாடு

உலகில் பல நாடுகளில் வெள்ளப் பெருக்கெடுக்கும் ஆறுகள் மிகவும் கவனமாகப் பராமரிக்கப்படு கின்றன. இவற்றின் அணைகள் உடைந்து விடாமல் இருப்பதற்காக மதகுகள், தடுப்புக்கள், நீர்த்தேக்கங் கள் மற்றும் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றுக்கு

## வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் அழிவுகள்

- வெள்ளநீரில் அடித்துச் செல்லப்படுவதால் ஏற்படும் உயிரிழப்புகள்.
- நீர்ப்பாம்புகள் மற்றும் விஷஜந்துக்களால் தீண்டப்படுதல்.
- பல்வேறு தொற்றுநோய்களுக்கு ஆளாதல்.
- எதிர்பாராத இடிபாடுகளில் சிக்கி உயிரிழத்தல் அல்லது அங்கவீனம் அடைதல்.
- வீடுகள் நீரில் மூழ்குதல் மற்றும் பாரிய வெள்ளப் பெருக்கின் தாக்கத்தினால் கட்டடங்கள் அழிவடைதல்.

## பொருளாதார அழிவுகள்

- விவசாய முயற்சிகள் தடைப்படல்
- பயிர்கள் அழிவுறுதல்
- பெறுமதியான பொருட்கள், கட்டடங்கள் அழிவடைதல்
- பொருளாதார, அபிவிருத்தி வீழ்ச்சி பல்வேறு விதமான தொற்று நோய்களின் தாக்கம். அதனால், ஏற்படும் மனித உயிரிழப்புகள், பணவிரயங்கள்.

எமது நாட்டைப் பொறுத்தவரை

## முன்னறிவிப்பு

வெள்ளப்பெருக்கு ஏற்படுவது பற்றிய தகவல்களை வளிமண்டலத்திணைக்களமே முன்னறிவிப்புச் செய்கின்றது. பின்வரும் விபரங்களை செவிமடுத்து, தெரிந்துகொள்வதன்மூலம், வெள்ளப்பெருக்கிலிருந்து உரிய வகையில் பாதுகாப்புப் பெறலாம். தேச சீதோஷ்ணம், வெள்ளத்தின் காலகட்டம், ஈரலிப்பு வலயம், நீர் கடந்து செல்லும் வரைபடம் அனுமானத்துக்கான தகவல்கள் என்பனவே அந்த விபரங்களாகும்.

## உலகில் அதிகளவான வெள்ளப்பெருக்கிற்கு முகங்கொடுக்கும் நாடுகள்

அமெரிக்கா
அவுஸ்திரேலியா
சீனா ஆகிய நாடுகளாகும்.

**ஏ.ஜே.எம். நிழாம்**



# உலகில் இணையத்தளங்களின் அதிவேக பாவனை மட்டம்





*இணைய பாவனையாளர்களுக்கு மிகவும் தேவையானது, அதிவேக இணைய இணைப்பாகும். மந்தமான இணைய வேகம் இணையப் பாவனையாளர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கக்கூடியது. தற்போது உலகிலேயே அதிவேக இணையத்தள இணைப்புகளைக் கொண்ட ஒன்பது நாடுகள் பின்வருமாறு:*

### ஒன்பதாவது இடம்: பெல்ஜியம்



இணைய வேகத்தில் பெல்ஜியம் ஒன்பதாவது இடத்தைப் பிடித்திருக்கின்றது. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 6.4 mbps

### எட்டாவது இடம்: ருமேனியா



இணைய வேகத்தில் ருமேனியா எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 6.8mbps

### ஏழாவது இடம்: சுவிட்ஸர்லாந்து



இணைய வேகத்தில் சுவிட்ஸர்லாந்து ஏழாவது இடத்தைப் பெற்றிருக்கின்றது. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 7.3mbps

### ஆறாவது இடம்: செக் குடியரசு



செக் குடியரசு இணைய வேகத்தில் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 7.4mbps

### ஐந்தாவது இடம்: லெட்வியா



இணைய வேகத்தில் லெட்வியா ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 8.2mbps

### நான்காவது இடம்: நெதர்லாந்து



இணைய வேகத்தில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ள நாடு நெதர்லாந்து. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 8.5mbps

### மூன்றாவது இடம்: ஜப்பான்



இணைய வேகத்தில் ஜப்பான் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 8.9mbps

### இரண்டாவது இடம்: ஹொங்கொங்



இணைய வேகத்தில் ஹொங்கொங் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 10.3mbps

### முதலாவது இடம்: தென் கொரியா




இணைய வேகத்தில் தென் கொரியா முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்நாட்டிலுள்ள மொத்த இணையத்தள இணைப்புகளின் சராசரி வேகம் 13.8mbps

**(எஸ்.எல்.மன்சூர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒஸ்ட்ரியா


ஒஸ்ட்ரியாவில் குளிர்காலத்தின்போது..


பிரதமர்


தேசிய இலச்சினை


ஜனாதிபதி

**அரசு:** நாடாளுமன்ற சமஷ்டிக் குடியரசு.

**சுதந்திரம்:** ஒஸ்ட்ரிய நாட்டிலிருந்து சோவியத் படைகள் வெளியேறிய தினம்- 27 ஜூலை 1955; முதலாவது ஒஸ்ட்ரிய பேரரசு- 1804; ஒஸ்ட்ரிய குடியரசு- 1918-1938; இரண்டாவது ஒஸ்ட்ரிய குடியரசு- 1945 வரை.

**தேசிய விடுமுறை தினம்:** தேசிய தினம், ஒக்டோபர் 26.

**ஜனாதிபதி** (2004): ஹென்ஸ் ஃபிஷர்.

**சான்சலர்** (2008):வேர்னர் ஃபேய்மன்.

## புவியியல்

ஐரோப்பாவின் முக்கிய மலையாகிய எல்ப்ஸ் மலையின் கிழக்குப் பகுதியில் ஒஸ்ட்ரியா அமைந்துள்ளது. இந்நாட்டின் 75% மான பகுதி மலைப் பிரதேசங்களாகவே உள்ளன. இங்கு பல பனிப்பாறைகளும் பனிப்படிவுகளும் நிறைந்து காணப்படுகின்றன. காடுகளும் மரங்களும் நிறைந்த நிலப்பரப்புகள் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 40% ஐ ஆக்கிரமிக்கின்றன. டன்யூப் நதி நாட்டின் முக்கிய நதியாகும். இது தவிர; ட்ராயு, என்ஸ், இன், முர், ராப் மற்றும் ட்ராயுன் ஆகிய நதிகளும் இங்கு பாய்கின்றன. மலைப் பிராந்தியத்தில் டசின் கணக்கான ஏரிகள் காணப்படுகின்றன. நியுசெட்லெர் ஏரியானது, ஒஸ்ட்ரியாவின் மிகப் பெரிய ஏரியாகும்.


தலைநகரின் ஒரு பகுதி





**மொத்தப் பரப்பு:** 32,382 ச.மைல் (83,870 ச.கி.மீற்றர்).

**நிலப்பரப்பு:** 31,942 ச.மைல் (82,730 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 9 மாநிலங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** வியன்னா.

**ஏனைய பெரிய நகரங்கள்:** கிராஸ், லின்ஸ், செல்ஸ்பேர்க், இன்ஸ்புருக்.

**உயர் மலைச் சிகரம்:** க்ரொஸ்க்ளொக்னர் (3,798 மீற்றர்).

**தாழ்மையம்:** நியுசெட்லர் கடல் (ஏரி).

**சனத்தொகை** (2010): 8,214,160.

**நாணயம்:** யூரோ (முன்னர் சில்லிங்).

**மொழிகள்:** ஜேர்மன் (உத்தியோகபூர்வ மொழி), ஸ்லோவின், க்ரோஷியன், ஹங்கேரியன்.

**இனக்குழுவினர்கள்** (2001): ஒஸ்ட்ரியர் 91.1%, முன்னாள் யூகோஸ்லேவியர் 4%, துருக்கியர் 1.6%, ஜேர்மனியர் 0.9%, ஏனையோர் அல்லது இனத்துவ அடையாள மற்றோர் 2.4%.

**சமயங்கள்** (2001): ரோமன் கத்தோலிக்கம் 74%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 5%, இஸ்லாம் 4%, மதமற்றோர் 12%.

**எழுத்தறிவு:** 98%.

**இணையத்தளக் குறியீடு:** .at

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 43

**தேசிய கீதம்**

Land der Berge, Land am Strome,
Land der Äcker, Land der Dome,
Land der Hämmer, zukunftsreich!
Heimat großer Töchter und
Söhne,... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு



வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மத்திய ஐரோப்பாவில் பாரிய நிலப் பரப்பைக் கொண்டிருந்த இன்றைய ஒஸ்ட்ரியா, முன்னர் பல்வேறு தரப்பினரால் ஆளப்பட்டதோடு. பின்னர் பரிசுத்த ரோமானியப் பேரரசின்கீழ் வந்தது. ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இப்பிரதேசம் சில பகுதிகளாகப் பிரிவடைந்தது. 1278 முதல் ஹப்ஸ்பேர்க் அரச வம்சத்தினரின் ஆட்சி ஆரம்பமாகியது. முதலாம் உலகப் போர் வரை இந்த வம்சத்தின் ஆட்சி தொடர்ந்தது. அதனையடுத்து, சில நூற்றாண்டுகளாக ஒஸ்ட்ரோ-ஹங்கேரி சாம்ராஜ்ஜியம் மிகப் பலமான உன்னத நிலையில் இருந்தது.


ஒஸ்ட்ரிய நாடாளுமன்றம்


க்ரொஸ்க்ளொக்னர் மலை (ஒஸ்ட்ரியாவின் உயர் மலைச்சிகரம்)

பிற்காலத்தில் ஒஸ்ட்ரியா ஹங்கேரியுடன் இணைக்கப்பட்டபொழுதிலும் 1919இல் அதிலிருந்து பிரிந்து தனிக் குடியரசானது. 1938 மார்ச் 12 இல் ஹிட்லர் ஒஸ்ட்ரியாவை ஜேர்மனியுடன் இணைத்துக்கொண்டார். 1945 இல் இரண்டாம் உலக யுத்த முடிவில் நேச நாடுகள் இதனை மீட்டெடுத்தன. 1955 இல் மீண்டும் சுதந்திர நாடானது. 1995 இல் சோவியத் படைகள் வெளியேறிய பின், ஐரோப்பிய யூனியனில் இணைந்தது. 2004 இல் இடதுசாரி சிந்தனைகொண்ட ஹென்ஸ் ஃபிஷர் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

## கலாசாரம்

ஒஸ்ட்ரிய கலாசாரத்தில் அந்நாட்டின் அயல்நாடுகளாகிய இத்தாலி, போலந்து, ஜேர்மனி, ஹங்கேரி ஆகிய நாடுகளின் கலாசாரத் தாக்கங்களை பெருமளவில் காணலாம். ஒஸ்ட்ரியா, ஒரு காலத்தில் ஐரோப்பாவில் மிகவும் பலம் பொருந்திய நாடாகத் திகழ்ந்தமையால், அதன் பாரம்பரிய கலை மற்றும் இசை என்பன ஐரோப்பா எங்கும் புகழ்பெற்று விளங்கின. சிற்பம், ஓவியம், இலக்கியம் மற்றும் இசை ஆகிய துறைகளில் அப்புகழ் இன்றும் மங்காமல் இருக்கின்றது.


ஸ்கோர்ன்ட்ரன் மாளிகை

## காலநிலை

அதிக வேறுபாடுகளைக்கொண்ட மூன்று நிலையான காலநிலைகளை இங்கு காணலாம். கிழக்கு தாழ்நிலங்கள், மத்திய உயர் நிலம், மேற்குப் பிராந்தியம் என மூன்று வெவ்வேறு காலநிலைகளாக நிலவுகின்றன.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 3.564 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 9.255 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001): AM 2, FM 65, SW 1. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 10. **இணையத்தளப் பாவனையாளர்கள்** (2007): 4.2 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2004): மொத்தம் 6,021 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2003): 133,718 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2007): 358 கி. மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** என்ஸ், கிரீம்ஸ், லின்ஸ், வியன்னா. **விமான நிலையங்கள்** (2007): 55.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 16.59%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், கிழங்கு வகைகள், கரும்பு, பழவகைகள், பாற்பண்ணை உற்பத்திகள்,பன்றிகள், கோழிப் பண்ணை, செம்மறி ஆடுகள். **கைத்தொழில்கள்:** கட்டடத் தொழில், இயந்திர உற்பத்தி, வாகனங்களும் அதன் உதிரிப் பாகங்களும், உணவு,உலோகங்கள், சுற்றுலாத்துறை. **இயற்கை வளங்கள்:** எண்ணெய், உலோகங்கள், உப்பு, நீர்மின்வலு. **ஏற்றுமதிகள்** (2009): இயந்திரங்களும் உபகரணங்களும்,மோட்டார் வாகனங்களும் அதன் உதிரிப்பாகங்களும். **இறக்குமதிகள்** (2009): ரசாயனப்பொருட்கள். உலோகப்பொருட்கள்,உணவுப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஜேர்மனி, இத்தாலி, சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- ஸ்கோர்ன்ட்ரன் மாளிகை
- ஹோஹென்சல்பேர்க் கோட்டை
- ஜயன்ட் ஃபெரிஸ் வீல்
- பெல்விடெயார் மாளிகை (வரலாற்றுப் புகழ்மிக்க கட்டடத்தொகுதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எக்ரோன்' சித்திரப் போட்டி பரிசளிப்பு விழா



'விஜய்' பத்திரிகையின் ஊடக அனுசரணையில் துஷார கலை அமைப்பும் 'எக்ரோன் கிராஃப்ட்' நிறுவனமும் இணைந்து நடாத்திய மாணவர்களுக்கான அகில இலங்கை மட்டத்திலான சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான விருதுகள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதிகளாக, 'எக்ரோன் கலர் கிராஃப்ட்' நிறுவனத்தின் தலைவர் அபுஷா ஏ.ரஷ்மான் தனது துணைவியாருடனும் 'கலர் கிராஃப்ட்' நிறுவனத்தின் இணை இயக்குனர்களான இரோன் ஏ.ரஹ்மான், ரிஷ்வான் ஏ ரஹ்மான் ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன், துஷார கலை அமைப்பின் அதிபர் துஷார ரணதுங்க மற்றும் ஊடக அனுசரணையாளர்கள் சார்பாக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

*(படப்பிடிப்பு: ஷெஹான் விக்ரமசிங்ஹ)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..................................................

27) இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

1. ஆனந்த சமரக்கோன் 2. புலவர்மணி மு.நல்லதம்பி
3. C.W.W. கன்னங்கரா 4. டி.பி.ஜாயா

28) மத்திய மாகாணத்தின் தலைநகரம் எது?

1. கண்டி 2. கொழும்பு 3. பதுளை 4. காலி

29) இலங்கையின் தேசிய மலர் எது?

1. நீலோற்பலம் 2. சூரியகாந்தி 3. மல்லிகை 4. நாகமலர்

30) வளவே கங்கை கடலுடன் கலக்கும் இடம்;

1. கொழும்பு 2. களுத்துறை 3. மாத்தறை 4. அம்பாந்தோட்டை

31) மின்னேரியாக் குளத்தைக் கட்டிய மன்னன் யார்?

1. பண்டுகாபயன் 2. மகாசேனன் 3. தாதுசேனன் 4. தேவநம்பிய தீசன்

32) இலங்கையின் அழகிய நீர்வீழ்ச்சி எது?

1. பம்பரகந்த 2. துன்கிந்த 3. அபடீன் 4. லக்ஸபான

33) நீருடன் நன்கு கலக்கக்கூடிய திரவம் எது?

1. மண்ணெண்ணெய் 2. பெற்றோல்
3. வினாகிரி 4. தேங்காய் எண்ணெய்

34) தேசப்படங்களில் சிறு வீதியை காட்டுவதற்குப் பயன்படும் நியம நிறம் எது?

1. மஞ்சள் 2. சிவப்பு 3. நீலம் 4. கபிலம்


35)  இவ்வுருவில் காணப்படும் போக்குவரத்து பொலிஸாரின் சமிக்ஞை வெளிப்படுத்துவது;

1. பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துக
2. வாகனங்கள் முன்னோக்கி வருக
3. முன்னால் வரும் வாகனங்களும் பின்னால் வரும் வாகனங்களும் நிறுத்துக
4. முன்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக

36)  இக்குறியீடு வெளிப்படுத்துவது;

1. அபாயம் 2. பெண்கள் மட்டும்
3. ஆண்கள் மட்டும் 4. இப்பக்கம் மேலே

37) உலர் மின்கலத்தைப் பயன்படுத்தி இரு மின்குமிழ்களை ஒரே தடவையில் ஒளிரச் செய்வதற்கு மூன்று கம்பித் துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் படத்தில் வரைந்து காட்டுக.



38) **6, 0, 7, 9** இவ்விலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச்சிறிய நான்கிலக்க எண் யாது?

..................................

39) 'அறுபத்தொன்பதாயிரத்து தொண்ணூற்று மூன்று' என்பதை எண்குறியில் தருக.


......................................

40) ......................, 4499 .................. இவ்வெண்ணின் முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் எழுதுக.

41) எண் 17 ஐ ரோமன் எண்குறியில் எழுதுக. .........................

42) 1kg சீனியின் விலை ரூபாய் 120,00 எனின், 2kg750g சீனி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? ..................................

43) 2kg750g நிறையுள்ள தேயிலையிலிருந்து எத்தனை 250g தேயிலைப் பெக்கட் தயாரிக்க முடியும்? ........................

44)  உருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள

1. விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ............................
2. உச்சிகளின் எண்ணிக்கை யாது? ................................

45) பாடசாலை ஒன்றில் 609 மாணவர்களும் இன்னொரு பாடசாலையில் 2,396 மாணவர்களும் உள்ளனர். இரு பாடசாலைகளிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................

46) தொழிற்சாலை ஒன்றில் வாரம் ஒன்றில் 8,603 சட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றில் 4,694 சட்டைகள் விற்கப்பட்டன. எஞ்சியுள்ள சட்டைகளின் எண்ணிக்கையைக் காண்க.

..........................................................

47 540 தோடம்பழங்களை 5 பேருக்கு சமமாகப் பகிர்ந்து கொடுத்தால், ஒருவருக்குக் கிடைக்கும் தோடம்பழங்கள் எத்தனை?

..........................................................




* ஒரு பூரணமற்ற சிட்டை கீழே காணப்படுகிறது. அதில் உள்ள ஐந்து வெற்றிடங்களையும் நிரப்புக.

| | பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| | பென்சில் | 6 | 5 | 00 | 30 | 00 |
| 48) | அடிமட்டம் | 3 | 12 | 00 | 36 | 00 |
| 49) | வரைதல் புத்தகம் | 5 | 8 | 00 | 40 | 00 |
| 50) | கலர் பெட்டி | 6 | ... | ... | 36 | 00 |
| 51) | கொப்பி | .... | 20 | 50 | 41 | 00 |
| 52) | | மொத்தம் | | | ....... | ..... |

53) தரப்பட்ட தரவுகளை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் நிகழக்கூடிய நிலைமைகள் பற்றி ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெறவேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய்- பயனிலை தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)


* இருண்ட ஒரு பெரிய காடு இருந்தது. அங்கே ஒரு மரக்கிளையின் மேலிருந்து ஒரு குருவி தலையை அசைத்து சுற்று முற்றும் பார்த்தது. ஆயினும், தனக்கு ஆபத்து எனக் கருதும் எதனையும் அக்குருவி காணவில்லை. அக்குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால்..............................

1. ..........................................................
2. ..........................................................
3. ..........................................................
4. ..........................................................
5. ..........................................................
6. ..........................................................

## வினாத்தாள்-II இற்கான விடைகள்

(ஜனவரி 4,11 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

*01) 1. தம்புள்ளை 2. இலங்கை அணி 3. சந்திரன்*
*4. இந்திய அணியை 5. தாமரை*
*02) 1. ஒளி 2. பானம் 3. பரந்து*
*03) 1. காற்றில் மரம் அசைந்து ஆடியது. 2. வானில் பறவைகள் பறந்தன.*
*04) 1. நந்தன் உண்மை பேசியதால் எல்லோரும் அவனைப் போற்றினார்கள்.*
*2. சுதன் குற்றவாளி என நீதிபதி தீர்ப்புக் கூறினார்.*
*05) 1. பொறுப்பை நீக்கிக்கொள்ளல் 2. மனமின்றிச் செய்தல்*
*3. விதண்டா வாதம்*
*06) 1. ஊதாரி 2. அணிந்துரை*
*07) 1. ஆராய்ந்து செய் 2. வீண் பெருமை*
*08) மாணிக்ககங்கை அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது.*
*09)* 1. Chair 2. Monkey 3. Mango Tree
*10) 1. அமைதியாக இரு. 2. என்னைப் பாருங்கள்.*
*3. நான் வெளியே போகிறேன்.*
*11) 1. இது எனது கதிரை 2. இது எமது வகுப்பு*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *12)* | *3* | *27)* | *2* | *38)* | *6079* | *53) பொருத்தமான ஆறு வாக்கியங்கள்* |
| *13)* | *1* | *28)* | *1* | *39)* | *69093* | |
| *14)* | *4* | *29)* | *1* | *40)* | *4498-4500* | |
| *15)* | *3* | *30)* | *4* | *41)* | XVII | |
| *16)* | *3* | *31)* | *2* | *42)* | *ரூபாய் 330.00* | |
| *17)* | *2* | *32)* | *2* | *43)* | *11* | |
| *18)* | *2* | *33)* | *3* | *44)* | *1. 12 2. 8* | |
| *19)* | *3* | *34)* | *1* | *45)* | *3005 மாணவர்கள்* | |
| *20)* | *2* | *35)* | *2* | *46)* | *3099 சட்டைகள்* | |
| *21)* | *4* | *36)* | *2* | *47)* | *108* | |
| *22)* | *2* | *37)* |  | *48)* | *36.00* | |
| *23)* | *2* | | | *49)* | *5* | |
| *24)* | *4* | | | *50)* | *6.00* | |
| *25)* | *2* | | | *51)* | *2* | |
| *26)* | *3* | | | *52)* | *183.00* | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்புகளால் அழியும் நுளம்புகள்



**'டெங்குக் காய்ச்சல்' ஒரு பயங்கரமான ஆட்கொல்லி நோயாகும். இலங்கையில் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். உலகளவிலும் இத்தகைய நிலையே காணப்படுகின்றது! இதற்கமைய, வருடாந்தம் கோடிக்கணக்கான மக்கள் டெங்குக் காய்ச்சலினால் பலியாகின்றனர் என்று அண்மைய புள்ளி விபரங்களினூடாக தெரியவந்துள்ளது**

இத்தகைய பயங்கரமான டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்கு எந்தவிதமான தடுப்பூசியோ அல்லது மருந்துகளோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, டெங்குக் காய்ச்சலுக்கு ஆளாகும் ஒருவர் உயிர் பிழைப்பது சற்றுக் கடினமான விடயமாகவே இருக்கின்றது. இதனால்தான் காய்ச்சல் ஏற்படும் பட்சத்தில், உடனடியாக மருத்துவரை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்ளும்படியும் அது டெங்குக் காய்ச்சல் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்கே உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளும்படியும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.


அத்துடன், டெங்கு நுளம்புகள் பரவாமல் இருப்பதற்கு சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதும் அவசியமாகின்றது. அதன்மூலம் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதும் ஒழிப்பதுமே தற்போதிருக்கும் ஒரே வழிமுறையாகும்.

இந்நிலையில், நுளம்புகளை ஒழித்துக் கட்ட ஒரு புதிய மரபணு மாற்ற யுக்தியை பிரித்தானியாவின் ஒக்சிடெக் உயிரியல் ஆய்வு மையத்தின் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதாவது, ஆண் நுளம்புகளின் உயிரைக் காக்கக்கூடிய நோய் எதிர்ப்புச்சக்திமிக்க வேதியியல் பொருளாக டெட்ரசைக்லின் காணப்படுகின்றது. டெட்ரசைக்லின் எனும் வேதியியல் பொருள் இல்லாவிட்டால், நுளம்புகள் வெகு விரைவில் இறந்துவிடும். எனவே, இந்த வேதியியல் பொருள் இல்லாதவாறு மரபணு மாற்றம் செய்யப்பட்ட ஆண் நுளம்புகளை ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.





இவ்வாறு, மரபணு மாற்றம் செய்யப்பட்ட இந்த ஆண் நுளம்புகள் கேமன் தீவுக்குள் விடப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.மேற்படி பரீட்சார்த்த நடவடிக்கையின் போது, மரபணு மாற்றம் செய்யப்பட்ட சுமார் 33 லட்சம் ஆண் நுளம்புகள் இங்கு விடப்பட்டன. அவை கேமன் தீவிலுள்ள டெங்குக் காய்ச்சலைப் பரப்பக்கூடிய ஈடிஸ் ஈஜிப்டை எனும் பெண் நுளம்புகளுடன் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டுள்ளன. ஆனால், இதன்மூலம் உருவான சந்ததிகள் எல்லாம், டெட்ரசைக்லின் எனும் வேதியியல் பொருள் இல்லாமல் வெகு விரைவில் இறந்துவிட்டன. இதனையடுத்து, அங்கிருந்த நுளம்பு களின் மொத்த எண்ணிக்கை யில் 80 சதவீதம் குறைந்துவிட்டமை அவதானிக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



எனவே, இந்த மரபணு மாற்ற யுக்தியை பின்பற்றுவதனூடாக, காலப்போக்கில் டெங்கு நுளம்புகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆக, நுளம்புகளைக் கொண்டே நுளம்பு இனத்தை அழிக்க உதவும் இந்த மரபணு மாற்ற யுக்தி, டெங்குவால் பாதிக்கப் படும் கோடிக்கணக்கான மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாகவே இருக்குமென அந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்திருப்பது 2012 ஆம் ஆண்டாகும். கடந்த 2011 ஆம் ஆண்டை 'சர்வதேச வனாந்தர (காடுகள்) வருடம்' ஆகவும் 'சர்வதேச ரசாயனவியல் வருடம்' ஆகவும் ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியிருந்தது. அவ்வாறே, சீனர்களும் பல்வேறு குறியீடுகளை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு வருடத்தையும் சிறப்பித்து கூறும் வழக்கத்தை கொண்டுள்ளனர். அதன்படி, 2011 ஆம் வருடத்தை 'பொன்முயல்' வருடமாக அவர்கள் பெயரிட்டிருந்தனர். எனவே, இத்தனை சிறப்புமிக்க 2011 ஆம் வருடத்தில் உலகளவில் நடந்த சில முக்கிய நிகழ்வுகளை சற்று மீட்டிப் பார்ப்போம்





# 20

# உலகின்

## ஜனவரி

**01-எஸ்தோனியாவில் யூரோ நாணயப் பாவனை ஆரம்பம்:**



எஸ்தோனியாவில் 2010 வரை பாவனையில் இருந்த 'கரூன்' நாணய அலகுக்குப் பதிலாக, யூரோ நாணயம் 2011 ஜனவரி 01 ஆம் திகதி முதல் பாவனைக்கு வந்தது. இதன்மூலம் யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் 70 ஆவது நாடாக எஸ்தோனியா திகழ்கின்றது.

**09 -சூடான் பிரிவினைக்கு பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு:**

சூடான் பிரிவுபட வேண்டும் என்ற தீர்மானத்தின்படி, தென் சூடானில் 50 வருடங்களுக்குப் பின்னர் சுதந்திரமான பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

**11- லிபிய அரசு எதிர்நோக்கிய நெருக்கடி:**



ஹிஸ்புல்லா இயக்கமும் நேச அணிகளும் லிபிய அரசிலிருந்து வெளியேறின. லிபிய அமைச்சரவையின் 11 உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்தனர்.

**14 - டியூனிசிய அரசாங்கம் வீழ்ச்சி:**



ஒரு மாதகாலமாக தொடர்ந்து நடந்த அரச எதிர்ப்பு போராட்டத்தின் பயனாக, 23 வருடங்களாக தொடர்ந்து ஆட்சியில் இருந்த டியூனிசிய ஜனாதிபதி சின் எல் ஆப்தீன் பென் அலி நாட்டில் இருந்து வெளியேறி சவூதி அரேபியாவுக்கு தப்பிச் சென்றார்.

## பெப்ரவரி

**11-எகிப்திய ஜனாதிபதி பதவி விலகல்:**



எகிப்தில் தொடர்ச்சியாக நடந்த போராட்டங்களால் 30 வருடங்களாக ஆட்சி அதிகாரத்தில் இருந்த எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பதவி விலகினார்.

**17 - லிபியாவில் உள்நாட்டு யுத்தம்:**

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையினால் லிபியாவுக்கு மேலாக வானில் விமானப் பயணம் தடைசெய்யப்பட்டது.

**24 - லிபியா உள்நாட்டு யுத்தத்துக்கு தயாராகியது:**



லிபிய ஜனாதிபதி தனது பாதுகாப்புப் படை அணிகளை தலைநகரமாகிய ட்ரிப்போலிக்கு அருகில் அணிதிரட்டி யுத்தத்திர்கு தயாரானார்.

## மார்ச்

**11- ஜப்பானில் பூமியதிர்ச்சி:**



9.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் கிழக்கு ஜப்பானில் பாரிய சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது. இதனால், ஏராளமான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இதன் தாக்கத்தினால் நான்கு அணுமின் உற்பத்தி நிலையங்கள் பாரிய அழிவுக்குள்ளாகின.

**29 -சிரிய அமைச்சரவை பதவி விலகியது:**



ஜனாதிபதி பஸார் அல் அசாத் தமது அமைச்சரவை பதவி விலகலை ஏற்றுக்கொண்டார்.

## ஏப்ரல்


**29 - பிரித்தானிய அரச குடும்ப திருமண விழா:**



இங்கிலாந்து இளவரசர் வில்லியம் மற்றும் கெத்தரின் கரம்பிடிக்கும் அரச குடும்ப திருமண வைபவம் மிக ஆடம்பரமாக நடைபெற்றது. சுமார் இரண்டு பில்லியன் வரையான மக்கள் இவ்விழாவைக் கண்டுகளித்தனர்.

## மே

**01-ஒசாமாவின் மரணம்:**




அமெரிக்க படையினரால் பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் அல்- கய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின் லாடன் பலியானதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

**16 - ரெட்கோ மலடிக் கைது செய்யப்பட்டார்:**



முன்னாள் பொஸ்னிய சேர்பிய ராணுவத் தளபதியான ரெட்கோ மலடிக் போர் குற்றம் புரிந்ததாகவும் பெரும் தொகையானோரை கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்த நிலையில், சேர்பியாவில் அவர் கைது செய்யப்பட்டார்.

## ஜூன்

**04 - 'புயஹுயே' எரிமலை வெடித்துச் சிதறியது:**



சிலி நாட்டின் புயஹுயே எரிமலை வெடித்துச் சிதறியதன் காரணமாக, தென் அமெரிக்கா, நியூஸிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஊடாக, மேற்கொள்ளப்பட்ட விமானப் பயணங்கள் அனைத்தும் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டன. எரிமலை வெடிப்பினால் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு அப்பகுதிகளில் இருந்து விலகிச் செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

## ஜூலை

**09 -தென் சூடான் தனி நாடாக உதயமாகியது:**





2011 ஜனவரி மாதம் நடாத்தப்பட்ட பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு முடிவின்படி, சூடான் நாட்டிலிருந்து தென் சூடான் பிரிந்து சுதந்திர அரசாக மலர்ந்தது. இந்தப் புதிய நாடானது, உலக வரைபடத்தில் 193 ஆவது நாடாக சேர்க்கப்பட்டது.

**09 - சிரிய மக்கள் வெளியேறினர்:**

சிரிய ராணுவம் ஜிசர் அஷ்ஷுகுர் நகரைச் சுற்றி வளைத்ததால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிரிய நாட்டு மக்கள் அங்கிருந்து வெளியேறி துருக்கி நாட்டிற்கு தப்பிச் சென்றனர்.

**11 -த நிவ்ஸ் ஒஃப் த வேர்ல்ட் இறுதிப் பயணம்:**




பிரித்தானியாவில் 1843 இல் ஆரம்பிக்கப்பட்ட டெப்லொய்ட் அளவிலான 'த நிவ்ஸ் ஒஃப் த வேர்ல்ட்' செய்திப்பத்திரிகையானது, பல்வேறு நபர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டு ஒலிப்பதிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# 2011 ஆம் ஆண்டு ... முக்கிய நிகழ்வுகள்

## ஒரு மீள்பார்வை

செய்தமை தொடர்பாக, ஏற்பட்ட பெரும் சர்ச்சையினால் இச்செய்திப் பத்திரிகை உத்தியோகபூர்வமாகத் தடை செய்யப்பட்டது.

**20 - சோமாலியாவில் பஞ்சம்:**



30 வருடங்களின் பின்னர், ஐக்கிய நாடுகள் சபையால் தென் சோமாலியாவில் பஞ்சம் என பிரகடனப்படுத்தப் பட்டது.

**22 - நோர்வே நாடு சோகத்தில் மூழ்கியது:**

நோர்வே பிரதமர் அலுவலகத்திற்கு



முன்பாக நிகழ்ந்த குண்டு வெடிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து இரு மணித்தியாலயங்களின் பின் நோர்வேக்குச் சொந்தமான உட்டோயா தீவில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் என்பனவற்றால் நோர்வே நாடு முழுவதும் துயரத்தில் மூழ்கியது.

**ஓகஸ்ட்**

**05 -செவ்வாய்க் கிரகத்தில் நீர்:**

செவ்வாய்க் கிரகத்தின் புகைப் படங்கள் பரிசீலனை செய்யப்பட்டதை அடுத்து, அங்கு நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிலவுவதாக நாஸா நிறுவனம் கருத்து வெளியிட்டது.

**20:28 -லிபியத் தலைநகரம் கிளர்ச்சியாளர்களின் கைகளில்...:**

கடாபியின் அரசை வீழ்த்திய கிளர்ச் சியாளர்கள் தலைநகர் ட்ரிப்போலியைக் கைப்பற்றினர்.

**செப்டெம்பர்**

**10 - MV ஸ்பைஸ் ஐலண்டர்-1:**



'MV ஸ்பைஸ் ஐலண்டர்-1' கப்பல் தன்சானியாவின் 'சென்ஸிபார்' ஆழ் கடலில் மூழ்கியது. இக்கப்பலில் பயணித்த 800 பயணிகளில் பெரும்பாலானோர் உயிரிழந்தனர்.

**25 - சவூதி பெண்களுக்கு வாக்குரிமை:**

அப்துல்லாஹ் மன்னர் சவூதி அரேபிய




பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கினார்.

**ஒக்டோபர்**

**03 - அப்பிள் நிறுவனத்தின் நிறுவுனர் மறைவு:**

அப்பிள் நிறுவனத்தின் நிறுவுனரான



ஸ்டீவ் ஜொப்ஸ், நீண்ட காலமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்ததன் காரணமாக உயிரிழந்தார்.

**05 - நியூஸிலாந்தில் மிக மோசமான சுற்றாடல் பாதிப்பு:**



MV ரீனா எனும் எண்ணெய்க் கப்பல் நியூஸிலாந்தின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள முருகைக் கற்பாறை களுக்கிடையில் சிக்கி விபத்துக்குள்ளாகியதால், 350 தொன் எண்ணெய் கடலில் கலந்தது. இதனால், 1,300 க்கும் அதிகமான பறவைகள் உயிரிழந்தன.

**04 - தாய்லாந்தில் பாரிய வெள்ளம்:**



தாய்லாந்தில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளப் பெருக்கால் 77 மாகாணங்கள் பெரிதும் பாதிப்படைந்தன. இதனால், பொருளாதார இழப்புக்களும் உயிரிழப்புக்களும் அதிகளவில் ஏற்பட்டன.

**20 - கடாபியின் மரணம்:**



லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி மொஹொம்மர் கடாபி, சர்ட் நகரில் கொல்லப் பட்டதால் லிபியாவில் அதுவரை நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது.

**23 -துருக்கியில் பூமியதிர்ச்சி:**


கிழக்குத் துருக்கியில் 7.2 ரிச்டர் அளவில் பதிவாகிய பூமியதிர்ச்சியினால் பெருந்தொகையானோர் பலியாகினர். அத்துடன், பெருமளவு கட்டடங்களும் தரைமட்டமாகின.

**31 - உலகின் சனத்தொகை அதிகரிப்பு:**

ஒக்டோபர் 31 இல் உலக சனத் தொகை 7 பில்லியனாக அதிகரித்தது.

**நொவெம்பர்**

**03 - நாஸாவின் MSL நடவடிக்கை:**



முற்பட்ட யுகங்களில் செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்தனவா? அல்லது தற்காலத்தில் ஏதாவது உயிரினங்கள் வாழ்கின்றனவா? என்பன தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ளும் நோக்கில், நாஸாவினால் 'கியூரியோசிட்டி' ரோவர் எனும் பெயரில் அழைக்கப்படும் ரொபோ கலமொன்று பயன்படுத்தப்பட்டது.

**டிசம்பர்**


**05 - புவிக்குச் சமமான கிரகம்:**



நாஸா நிறுவனத்தால் விண்ணுக்கு ஏவப்பட்ட 'கெப்லர்' தொலைநோக்கி மூலம் புவிக்குச் சமமான- உயிர்வாழ்வதற்குத் தகுதியுடைய கிரகமொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இப்புதிய கிரகம் 600 ஒளிவருடங்களுக்கு அப்பால் அமைந்துள்ளது. இப்புதிய கிரகத்திற்கு 'கெப்லர் 22b' என பெயரிட்டுள்ளனர்.

**15 - ஆர்ப்பாட்டக்காரர்:**

புகழ்பெற்ற டைம் சஞ்சிகையால்




வருடந் தோறும் தெரிவு செய்யப்படும் 'வருடத்தின் முக்கியஸ்தர்' (Person of the year) என்ற விடயத்திற்கு இம்முறை 'ஆர்ப்பாட்டக்காரர்' எனப் பெயரிட்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டு முழுவதும் உலகின் பல்வேறு இடங்களில் கிளர்ச்சிகளும் புரட்சிகளும் போராட்டங்களும் நிகழ்ந்ததாலேயே இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.

**இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## லட்சியம்

மனிதா! உனக்கிருந்தால்
இலட்சியம்
அதற்கிருந்தால் உன்னிடம்
முயற்சியும்
வெற்றி என்பது உனக்கு
நிச்சயம்!

மனிதா!
உனக்கில்லையென்றால்
இலட்சியம்
அதிலிருந்தால் உன்னிடம்
அலட்சியம்
நீ அரை மனிதன் என்பது
நிச்சயம்!



# உண்மையை அறிந்திடு!

அடர்ந்த காடு ஒன்றில் விலங்குகள் அனைத்தும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அங்கே ஒரு பெண் குதிரையும் அதன் குட்டியும் அங்கு கிடைத்த புல்லை மேய்ந்து அருவிக்கரையில் நீரைக் குடித்து இன்பமாக வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் தாய்க் குதிரை தன் குட்டியிடம் "மகனே நீ இப்போது பெரியவனாகி விட்டாய். எனவே, அவ்வப்போது சில உதவிகளை எனக்குச் செய்யலாமே" என்று கூறி ஒரு வேலையை செய்துவர அனுப்பியது. தனது தாயின் சொல்லுக்கு ஏற்ப அங்கிருந்து சென்ற குட்டிக் குதிரை சிறிது நேரத்தில் ஓர் ஆற்றங்கரையை அடைந்தது.



ஆற்றில் சிறிதளவு நீர் ஓடிக்கொண்டிருந்ததால், ஆற்றைக் கடப்பதா வேண்டாமா? என்று அது யோசித்தது. ஆற்றங்கரையில் ஒரு பசு மேய்ந்து கொண்டிருந்ததைப் பார்த்து "பசு அக்கா, என்னால் இந்த ஆற்றைக் கடக்க முடியுமா?" என கேட்டது.

"ஏன் முடியாது? என் கன்றின் முதுகு வரை கூட நீர் வரவில்லை. அப்படியிருக்க ஏன் உனக்கு இதனைக் கடக்க முடியாது" என்று கேட்டது.

இதைக் கேட்ட, குதிரைக்கு உற்சாகம் வந்துவிட்டது. அப்போது அங்கிருந்த ஓர் அணில் "இந்த ஆறு மிகவும் ஆழமானது. அந்தப் பசு சொல்வதைக் கேட்டால் நீ நீரில் மூழ்கிடுவாய்" என்றது. "ஆறு ஆழமானது என்று உனக்கு எப்படித் தெரியும்" என்று கேள்வி கேட்டது குதிரைக் குட்டி. "நேற்று என் நண்பன் ஒருவன் இதில் மூழ்கி இறந்துவிட்டான்" என்றது அந்த அணில்.

இதனால்,மிரண்டுவிட்ட குதிரைக்கு எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியவில்லை. இதனால், இப்பிரச்சினையை தன் தாயிடம் கேட்கலாம் என நினைத்து திரும்பிச் சென்றது. மகனைக் கண்ட தாய் "என்னடா இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாய்" என்று கேட்டது. நடந்ததை குதிரை கூறியது. அதனைக் கேட்ட தாய்க் குதிரை வாய்விட்டுச் சிரித்தது. "மகனே பசுவின் உயரத்தையும் அணிலின் உயரத்தையும் யோசித்துப் பார். இவற்றில் எது சரி என்பது உனக்குப் புரியும்" என்றது. தாயின் அறிவுரையைக் கேட்டு தெளிவுபெற்ற குட்டிக் குதிரை சந்தோஷத்துடன் ஆற்றைக் கடந்து சென்றது.

பீ.ஆர்.பஸ்ரி அஹ்மட்,
அறபா தே.பாட., மாத்தறை.



# உணவும் உடல் நலமும்



எமது தவறான உணவுப் பழக்கம் மூலமாகவே நாம் இதயநோய், புற்றுநோய் என்பனவற்றுக்கு ஆளாகின்றோம். இவற்றைத் தவிர்ப்பதற்கு சமச்சீர் உணவு முறைகளை நாம் வகுக்க வேண்டும். அதற்கமைவாக, கொழுப்புணவும் எமக்கு அவசியமானதே. இவை எமது உடலுக்கு சக்தியைக் கொடுப்பதுடன், இவற்றில் கொழுப்பில் கரையும் உயிர்ச்சத்துக்களும் உள்ளடங்கியுள்ளன. அதிஉயர் கொழுப்புணவுகளால் கொலஸ்ட்ரோல் அளவு உயர்த்தப்பட்டு இதயநோய் ஏற்படுகின்றது. அத்துடன், சூரியகாந்தி எண்ணெயில் கொலஸ்ட்ரோல் உருவாகும் தன்மை குறைவாகவே காணப்படுகின்றது.

ஏ.எம்.அஸ்மத் அகிலா,
அ/நிக்கவெவ மு.வித்., ஹொரவப்பொத்தானை.

# தலையால் உலக சாதனை




1998 ஆம் ஆண்டு ஐரோப்பாவின் சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்ற புகழையும் அந்த ஆண்டின் 'சிறந்த கால்பந்தாட்ட வீரர்' என்ற உலகக் கால்பந்துக் கழகத்தின் விருதையும் பிரான்ஸ் நாட்டின் வீரரான 26 வயதுடைய ஸிடேன் பெற்றுள்ளார். முதற் தடவையாக உலகக் கால்பந்துக் கோப்பையை பிரான்ஸ் பெற்றுக்கொள்ள இவர் 'தலையால் முட்டி அனுப்பிய' இரண்டு கோல்களே முக்கிய காரணமாக அமைந்தன. இவர் போட்ட இந்த இரண்டு கோல்களும் பிரான்ஸ் நாட்டு மக்களைப் பெரிதும் கவர்ந்தன. இதனால், விற்பனையாகும் அனைத்துப் பொருட்கள் மீதும் இவரது உருவப்படங்கள் அதிக அளவில் இடம்பெற்றன. தலையால் போட்ட கோல்களால் உலக அளவில் மிகச் சிறந்த கால்பந் தாட்ட வீரர் என்ற விருதையும் இவரே வென்றுள்ளார்.

பஸ்னா அன்வர்தீன்,
மின்ஹாத் தேசிய பாட.,
திக்குவல்லை.

## கண்டு பிடிப்புக்கள்

- புகைக்கப்பல் -ஹென்றி பெல்
- நீராவியில் இயங்கும் புகையிரதம் - ஜோர்ஜ் ஸ்டீவன்ஸன்
- மோட்டார் வாகனம் -டெம்லர்
- தொலைபேசி - அலெக்சாண்டர் கிரஹம் பெல்
- புகைப்படம் - ரொபர்ட் புல்டன்
- தந்திச் சேவை - சாமுவேல் மோர்ஸ்
- நெசவு இயந்திரம் - ஜோன்கே

இரகுநாதன் ரஜிந்தன்,
மு/மல்லாவி மத்திய
கல்லூரி.

## அங்கிகளின் கருவில் காணப்படும் நிறமூர்த்த எண்ணிக்கைகள்

| அங்கிகள் | நிறமூர்த்த எண்ணிக்கை |
| --- | --- |
| நுளம்பு | 06 |
| தவளை | 26 |
| மனிதன் | 46 |
| எலி | 42 |
| கோல்ட் பிஷ் | 100 |
| கோதுமை | 20 |
| நெல் | 24 |
| வெங்காயம் | 16 |



ஆர்.திவ்யசோபனா,
சென்.விஜியன்ஸ், பொகவந்தலாவ.

# வண்ணத்துப்பூச்சி



வண்ணத்துப்பூச்சிக்களைக் கைகளால் பிடித்தால் விரல்களில் வண்ணப் பொடிகள் ஒட்டியிருப்பதைக் காணலாம். அவற்றின் இறக்கைகளின் மீதுள்ள நுண் துகள்களை தடவியெடுத்து விட்டால், அதன் இறக்கை ஓர் ஒளியூடுருவும் மென்படலமாகத் தோன்றும். இதுவே வண்ணத்துப்பூச்சிகள் பள பளப்பாக இருப்பதற்கான காரணமாகும்.

பாத்திமா ஃபகுஹா,
க/அக்குறனை மு.பா.ம.வித்.,
அக்குறனை.

# S.W.R.D பண்டாரநாயக்க



பிறப்பால் கிறிஸ்தவரான சொலமன் வெஸ்ட் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்க அவர்கள் இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்வியைக் கற்றார். தமது கல்வியை முடித்து தன் தாய்நாடு திரும்பிய இவர், அரசியலில் மிகத் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார்.

தேசிய கலாசாரத்தை மதித்த பண்டாரநாயக்க அவர்கள் காலப் போக்கில் பௌத்த சமயத்தையும் தழுவினார். சிங்களப் பௌத்தர்களுடனான தொடர்பால் இவரது தேசிய உணர்வு மேலும் உயிர்ப்புப் பெற்றது. தேசிய கலாசாரத்தை மதித்த அவர் தேசிய ஆடைகளை அணிந்து தேசியத் தன்மையுடன் செயற்பட்டு இலங்கையர்களிடையே புதிய கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். இவரது வாழ்க்கைத் தத்துவமாக 'மனிதனுடைய முக்கியமான கடமை, மனிதனுக்குச் சேவை செய்வதே' என அமைந்தது. இலங்கை அரசியல் அரங்கில் சுடர்விட்டுத் துலங்கும் தலைவரான பண்டாரநாயக்க அவர்கள், அரசியலில் புதிய புரட்சி ஒன்றை விளைவித்தவராவார். இறுதியில் பௌத்த பிக்கு ஒருவரின் துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகி இவர் மரணமடைந்தார்.

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி தே.பாட.,
ஓட்டமாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்



'சேர் பொன். இராமநாதன்' பற்றிய ஆக்கம் பாடசாலைக் கல்விக்குப் பெரிதும் உதவியது. அவரைப் பற்றி குறைந்தளவு தகவல்களையே இதுவரை பெற்றிருந்தேன். எனினும், நீ அதனைப் பூரணப்படுத்தி விட்டாய். நீ தாங்கி வந்திருந்த அனைத்து ஆக்கங்களையும் வாசித்து பயன்பெற்றேன்.

**-மு.ஹேமாஷிதா, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

*'Facebook: மகிழ்ச்சி+ஆபத்து' எனும் ஆக்கம் மிகவும் பயனுடையதாக இருந்தது. நல்ல, கெட்ட விடயங்களை இதனூடாகப் பெறக்கூடியதாக இருந்தது.*



*எதையும் தேவைக்கேற்ப சரிவரப் பயன்படுத்தினால் தீங்குகளுக்கு இடமேது? என்பதை உணர்த்துவதாய் இருந்தது இந்த ஆக்கம். நல்லதைக் கற்று நலமாய் வாழ வழிவகுப்பதில் விஜய்யின் பங்கு அளப்பரியது.*

**-இம்திஸாம் அஹமட், பள்ளிமுள்ள, நீர்கொழும்பு.**

வழக்கம்போல் 'விண்வெளித் தகவல்கள்' பகுதி சிறப்பானது. 'நல்லதை உண்போம் நோய்களை வெல்வோம்' எனும் ஆக்கம் பயன் மிக்கது.



'இடி-மின்னல் தாக்கம்' பற்றிய செய்தி அறிவுரையாகவும் முன்கூட்டியே எச்சரிக்கை விடுப்பதாகவும் இருந்தது. 'கணனி ஐயங்கள்' பகுதி கணினி அறிவுக்கு மிகவும் பயனளிக்கின்றது. 'சாதனையாளர்கள்' பற்றி அறிவதன்மூலம் அவர்களின் கண்டுபிடிப்புகளை அறிய முடிகின்றது. 'மனித மூளை' பற்றிய தகவல் என்னை சிந்திக்க வைத்தது.

**- எம். அப்ஷான், தாஜுதீன் மாவத்தை, கள்-எலிய.**

நான் 'விஜய்' பத்திரிகையின் நீண்டகால வாசகன். தற்போது தரம் 12 விஞ்ஞானப் பிரிவில் கற்கின்றேன். சிறு வயதிலிருந்தே உன் 'ஆக்கங்கள்', 'புலமைப்பரிசில் வினா-விடை', 'பொது அறிவு' என்பவற்றின்மூலம் நீ ஏந்தி வந்த அறிவை சிறப்பாகப் பெற்று வந்த நான், எங்கே தரம் 12 இல் தனியாகிவிடுவேனோ என்று அச்சப்படுகிறேன். எனவே, நீ தொடர்ந்தும் என் போன்றவர்களுக்கு துணை புரிவாய் என்ற நம்பிக்கையுடன்....

**- எம்.யூனுஸ், எஃப்.சி. வீதி, புதிய காத்தான்குடி-03.**

விஜய்யே! நீ சுமந்து வரும் விடயங்களில் 'இதைத்தான் விரும்பி வாசித்தேன்' என்று கூறுவதைவிட, 'அனைத்தையும் விரும்பி வாசித்தேன்' என்று கூறுவதே சாலச் சிறந்தது. ஏனெனில், கல்வி சம்பந்தமான ஏராளமான விடயங்களுடன் வாரம்தோறும் எம்மை நாடி வருகின்றாய். மலர்ந்திருக்கும் புதிய ஆண்டிலும் உன் சேவை தொடர மனதார வாழ்த்துகின்றேன்.

**-எ.எறிக் பிறையன், தமிழ் மத்திய கல்லூரி, பண்டாரவளை.**

'கடற்பசுக்கள்' பற்றிய ஆக்கம் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. கடற்பசுக்களைப் படங்களில் பார்த்திருந்தபோதும், அவை பற்றிய விபரங்களை 'விஜய்' ஊடாகவே அறிந்துகொண்டேன். 'சேர். பொன். இராமநாதன்' தொடர்பான ஆக்கமும் சிறப்பானது. 'ஆரோக்கிய உணவின் அவசியம்', 'சிறுகதைகள்', 'இராமாயணம்', 'வரலாற்றிலிருந்து' போன்றவற்றையும் விரும்பி வாசித்தேன்.

**- எஃப்.நிப்லா, பெரிய நீலாவணை, மருதமுனை.**

ஒவ்வொரு கிழமையும் உன்னை நான் வாங்கி வாசிக்கின்றேன். 'கடற்பசுக்கள்', 'நீருக்கடியில் பயணிக்கும் நீர்மூழ்கி விமானம்', 'அமேசன் நதிக்கடியில் ஒரு பாதாள நதி', 'இலங்கையின் கல்வித்துறை சார்பான செய்திகள்' என்பவற்றை வாசித்து அதிக பயன்பெற்றேன்.

**- எம்.சிபாக், பிரதான வீதி, இறக்குவானை.**

**இந்த இதழில் (11.01.2012) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 18.01.2012.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**  வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு. 

## வழி காட்டுங்கள்



1




இங்குள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி, குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க

2

## பின்வரும் படங்களை அவற்றின் ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களுடன் இணைக்க

3

M

Z

B

G

O




## குழம்பியுள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி குட்டிக்கதை அமைக்க

5

1. தனது தேவையின் நிமித்தம் அந்த இலவச மலசலகூடத் தொகுதிக்குள் சென்று வெளியே வரும்போது,அங்கிருந்த அந்த தொழிலாளி தலையைக் குனிந்தவாறே, சுரேஷிடம் கைநீட்டினான்.
2. "மிக்க நன்றிப்பா" என்று கூறிய சுரேஷ், பத்து ரூபாய் தாள் காசை அவனுக்கு நீட்டினார். "வேண்டாம் ஐயா! வேலைக்குத்தான் காசு கேட்டேன். உதவிக்காக அல்ல" என்றான் அவன். சுரேஷ் திகைத்து நின்றார்.
3. அது அரசாங்கத்தினால் பொதுமக்களின் நலன்கருதி அமைக்கப்பட்டிருந்த பொது மலசலகூடத்தொகுதி. அதனை மேற்பார்வை செய்யவும் துப்புரவு செய்யவும் என ஒரு தொழிலாளி நியமிக்கப்பட்டிருந்தான்.
4. 'இலவச மலசலகூடப் பாவனைக்காக காசு கேட்கிறாயா?' என அவனை முறைத்துக்கொண்டே வெளியேறினார் சுரேஷ்.
5. பதறியடித்துக்கொண்டு அங்கு ஓடி வந்த சுரேஷைக் கண்டு, "ஐயா! இது உங்களுடையதா? சுத்தம் செய்யப்போனபோது அங்கு இருந்தது" என்று கூறிய அந்த தொழிலாளி, சுரேஷிடம் அவரது கைப்பேசியை நீட்டினான்.
6. சற்றுத் தூரம் சென்ற பின்னர்தான் அவருக்கு ஞாபகம் வந்தது. 'ஐயோ! பெறுமதி மிக்க கைப்பேசியை அங்கு தவறவிட்டு விட்டேனே என்று'.

## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக




4





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.01.18ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 347
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## அறிவுக்கு விருந்து - 344 விடைகள்


**போட்டி: 01**

1. XVIII, XVI, XIV, XII, X
2. XXX, XL, L, LX, LXX
3. C, CX, CXX, CXXX, CXL
4. II, IV, VI, VIII, X

**போட்டி: 02**

| ஒருமை | பன்மை |
|---|---|
| 1. முள் | முட்கள் |
| 2. பல் | பற்கள் |
| 3. நட்சத்திரம் | நட்சத்திரங்கள் |
| 4. கடிதம் | கடிதங்கள் |
| 5. அடையாள | அடையாளச்சின்னங்கள் |

**போட்டி: 04**




**போட்டி: 05**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| v | a | r | r | o | w |
| y | o | y | o | y | l |
| n | k | d | e | y | e |
| o | n | p | t | a | t |
| p | a | r | r | o | t |
| p | a | n | d | a | s |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 344 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ருகையா ஹஸன், பெரேரா லேன், வெள்ளவத்தை.

**போட்டி: 02**
எஸ்.ஐஷ்வர்யா, சந்தை வீதி, ஆவரங்கால்.

**போட்டி: 03**
பி.சிந்துஜா, ரேஸ் கோஸ், நுவரெலியா.

**போட்டி: 04**
இஸ்லாஹுல் ஹஸீன், மீ-எல்ல, ஹக்மன.

**போட்டி: 05**
உ. அஸ்வத்,
ராசாவின் தோட்ட ஒழுங்கை,யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ எஃப். அஸ்ரா, சாய்ந்தமருது.
- ★ அ.பிரணவன், அனிஞ்சியன்குளம்.
- ★ பிஹாம், அக்கரைப்பற்று.
- ★ எம்.வபா, பமுனுகம.
- ★ பி.சுமேஷ், பன்னலவெல.
- ★ டி.பிருந்தாளினி, பத்தனை.
- ★ ஸீனத் ஜஹான், உடுதெனிய.
- ★ க.உதர்ஷன், திருகோணமலை.
- ★ ஸ்ரீ. டிலெக்ஷனா, ஓமந்தை.
- ★ என்.ரஹ்மானியா, மீகஹமுல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.அக்ரம்,
ஜப்பார் மத்திய கல்., மடிகே கலகெதர.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.திப்லா,
நாச்சியாதீவு மு.ம.வித்., நாச்சியாதீவு.




ச.கவிர்தன்,
கொக்குவில் இந்து கல்.,
கொக்குவில்.



எஃப்.சஹ்ரா,
பாத்திமா பாலிகா மு.வித்.,
புத்தளம்.




இ.ஷாலினா,
சவேரியார் பெ.கல்.,
மன்னார்.



தே.பிரியதர்சன்,
முருகானந்தாக் கல்லூரி.,
முரசுமோட்டை.



ரா.விஜேய்குமார்,
விக்னேஸ்வரா ம.வித்.,
எல்பொட.



எஃப்.உமைரா,
பாலர் பாடசாலை, தில்லையடி.




எம்.இலட் உமர்,
அஸ்ஹர் கல்லூரி, அக்குறணை.



எஃப்.தியாஷா,
அல்-ஹிரா மு.ம.வித்.,
கொட்டாரமுல்லை.



எஃப்.ரிஸ்கா,
நம்புக்கல மு.ம.வித்., விலானகம.



எஃப்.வஸ்னா,
வியாங்கல்லை மு.ம.வித்.,
வியாங்கல்லை.



என்.நஜ்லா,
அல்-அஸ்ஹர் மு.ம.வித்.,
ஹெம்மாதகம.



க.கோபிகா,
இந்துக் கல்லூரி.,
யாழ்ப்பாணம்.



பா.ரஜுகா,
இலுப்பைக்கடவை அ.த.க.பாட.,
இலுப்பைக்கடவை.



யாழ்ப்பாணம்- ஆழியவளையைச் சேர்ந்த சந்திரசேகர்-கோகுலவதனி தம்பதியரின் செல்வப் புதல்வி யுகநிலா, 16.01.2012 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



மானிப்பாயைச் சேர்ந்த இராஜகிருஷ்ணன்-ராதிகா தம்பதியரின் செல்வப் புதல்வன் லோஜிதன், 05.01.2012 அன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் உட்பட, நண்பர்கள் அனைவரும் விநாயகர் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



சாவகச்சேரியைச் சேர்ந்த கே.அர்ச்சனா, 01.01.2012 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



ஹுனூமலுவையைச் சேர்ந்த நலீம்-ரம்சானியா தம்பதியரின் செல்வப் புதல்வி கதீஜா, 31.12.2011 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

# கலை நிர்மாணங்கள்

## ஓவியம் வரைவோம் - 84

ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

ஓவியப் பாடம் கற்கும் மாணவர்கள் கலை நிர்மாணங்களின் அமைப்புக்களை நன்றாக மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். அத்துடன், அதன் அமைப்பு முறைகள், வரலாறு போன்றவற்றை நினைவில் வைத்திருத்தல் வேண்டும். அதற்கு இரண்டு வழிகளைப் பின்பற்றலாம். முதலாவது- இந்தக் கலை நிர்மாணங்களை வரைந்து அதன் பாகங்களை குறிப்பதன்மூலம் மனதில் பதித்தல். மற்றையது-சுற்றுலா செல்வோர் இந்தக் கலை நிர்மாணங்களைப் பார்த்து ரசிப்பதோடு மட்டுமன்றி, அவற்றின் அமைப்புக்களை மனதில் பதிய வைத்துக்கொள்ளல். அந்தவகையில், கலை நிர்மாணங்களை இரு வகையாக நோக்கலாம்.

1. செதுக்கல்கள்
2. ஓவியங்கள்

'செதுக்கல்கள்' என்றால், கருங்கற்களில் செதுக்கி சிலைவடிப்பதும் மரப் பலகைகளில் செதுக்கி கலை நிர்மாணங்களை வடிப்பதுமாகும். இலங்கையின் வரலாற்றை நோக்கும்போது, இத்தகைய




செதுக்கல்களே இன்று எமக்கு வரலாற்று ஆதாரங்களாக அமைந்துள்ளன. தாகபைகளுக்கு பக்தர்கள் ஏறிச் செல்லும் படிக்கட்டுப் பாதையில் நாம் சந்திரவட்டக்கல், காவற்கல், மகர உருவம், புன்கலசம் போன்றவற்றைக் காணலாம். இத்தகைய கலை நிர்மாணங்களில் முதலில் சந்திரவட்டக்கல் பற்றி நோக்குவோம்.

### சந்திரவட்டக்கல்

இலங்கையின் பிரதான நகரங்களான அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி ஆகிய நகரங்களில் காணப்படும்




வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களுக்கு உட்பிரவேசிக்கும் படிவரிசைப் பகுதியில் சந்திரவட்டக்கல்லைக் காணலாம். இது சந்திரனின் பாதி அமைப்பில் இருப்பதால், இந்தப் பெயரைப் பெற்றுள்ளது. இதன் அமைப்பு முறையில் அநுராதபுரக்கால சந்திரவட்டக் கற்களைவிட, பொலன்னறுவைக்கால சந்திரவட்டக்கற்கள் வேறுபட்டவையாகும். கண்டிக்கால சந்திரவட்டக்கற்கள் மேற்கூரிய இரண்டையும்விட வேறுபட்ட தோற்றம் கொண்டது. அதற்கமைய, சந்திரவட்டக்கல்லில் உள்ளடங்கும் உருவங்களும் அமையும் முறையும்




அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி ஆகிய யுகங்களின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் காணப்படுகின்றன. (தொடரும்)



ஹபுகஸ்தலாவை அல்-மின்ஹாஜ் தேசிய பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியின்போது 11 வயதிற்குக்கீழ்ப்பட்ட மாணவர்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் எம்.ஆர்.றகீப் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதோடு, வலய மட்டப் போட்டியிலும் மத்திய மாகாண மட்டப் போட்டிகளிலும் கலந்துகொண்டு முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இவர், தனக்குக் கிடைத்த பதக்கத்துடனும் சான்றிதழுடனும் நிற்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் அணுகுமுறை



மாதாந்த பரீட்சைகளுக்கான விடைத்தாள்களைத் திருத்தி, தன் வகுப்பு மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து அவர்களிடம் கொடுத்துக் கொண்டிருந்தார், ஏழாம் வகுப்பு ஆசிரியர் கந்தசாமி. அனைத்து மாணவர்களும் நல்ல மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர். ஆனால், ரத்தினம் மட்டும் விதிவிலக்காக குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தான்.

மதிய உணவு இடைவேளைக்கான நேரம் வந்தது. மாணவர்கள் அனைவரும் கலைந்து சென்றனர். வகுப்பில் யாரும் இல்லை என்று உறுதி செய்துகொண்ட ஆசிரியர் ரத்தினத்தைத் தனியாக அழைத்தார். ''ரத்தினம் நீ பாடங்களை நன்றாகப் படிப்பதில்லையா? எல்லாவற்றிலும் தேர்ச்சி அடைந்திருந்தாலும் மதிப்பெண்கள் மிக குறைவாக இருக்கின்றதே! நன்கு படித்து அடுத்த தேர்வில் கூடுதல் மதிப்பெண்கள் பெற முயற்சி செய். உன்னுடன் படிக்கும் மாணவர்கள் அனைவரும் எப்படி மதிப்பெண்களைப் பெற்றிருக்கின்றார்கள் என்று கவனித்தாய் அல்லவா? நன்றாகப் படித்தால்தானே நாளை நல்ல வேலைக்குப் போக முடியும். அப்போதுதான் உன் பெற்றோருக்கும் நல்ல பெயர் வாங்கித் தர முடியும். அதனால், கொஞ்சம் கஷ்டப்பட்டுப் படி. புரியாத பாடங்கள் எதுவென்றாலும், என்னிடம் எப்போது வேண்டுமானாலும் தயங்காமல் கேள். சந்தேகங்களைக் கேட்கப் பயந்து கொண்டு அப்படியே மனதில் பூட்டி வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. என்ன ரத்தினம் நான் சொல்வது புரிகிறதா? உன் நலனில் அக்கறை உள்ளதால்தான் உன்னை தனியாக அழைத்துச் சொல்கிறேன். நாளை முதல் படிப்பில் சற்று ஆர்வமுடன் கவனம் செலுத்து'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

மறுநாள், வழக்கம்போல் கந்தசாமி ஆசிரியர் தனது வகுப்பில் நுழைந்தார். கரும் பலகையில் எழுதியிருந்த வாசகம் அவரைக் கவனிக்க வைத்தது. அது இதுதான்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. அதை எப்படி சொல்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். நன்றி'' என எழுதப் பட்டிருந்தது.

இதைப் பார்த்ததும், மாணவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் யார் இதை எழுதி இருப்பார்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தனர். ஆனால், ஆசிரியர் கந்தசாமிக்கு மட்டும் இந்த வேலை யாருடையது என்று தெரிந்துவிட்டது. அடுத்து வரும் நாட்களில் ரத்தினத்தின் படிப்பில் பெரிய மாற்றம் தெரிந்தது. 'நாம் தனிமையில் அழைத்து அறிவுறுத்தியதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது' என்று எண்ணி மனதுக்குள் பெருமிதம் கொண்டார், ஆசிரியர் கந்தசாமி.





# எல்லாம் புகழும் இறைவனுக்கே!

செழியனூர் என்ற அழகான கிராமத்தில் செடிகொடிகளுடன் வண்ண வண்ணப் பூக்களாகப் பூத்துக் குலுங்கும் தோட்டம் ஒன்று இருந்தது. அதில் பலவகையான மரங்களும் இருந்தன.

அங்கே இருந்த ஒரு மாமரத்தில் ஒரு குயிலும், தென்னை மரத்தில் ஒரு மயிலும், ஆல மரத்தில் ஒரு கிளியும் வசித்து வந்தன.

கிளி, அழகாகப் பேசும். குயில் மிக அருமையாகப் பாடும். மயில் அற்புதமாக ஆடும்.

கிளி, குயில், மயில் மூன்றும் தங்கள் திறமையின் மீது அதீத கர்வம் கொண்டிருந்தன. எனவே, அவை அடிக்கடி தங்களில் யார் பெரியவர்? என்று விவாதித்துச் சண்டை போட்டுக்கொண்டிருந்தன.



ஒருநாள் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, அவை மூன்றும் ஒரு சிறுமியிடம் சென்று கேட்டன.

''குழந்தையே' எங்களில் யாரை உனக்கு மிகவும் பிடிக்கும்? யார் பெரியவர் என்று நீயே சொல் பார்ப்போம்'' என்று கேட்டன.

''உங்கள் மூவரையும் எனக்குப் பிடிக்கும். உங்கள் மூன்று பேரிடமும் ஒவ்வொரு திறமைகள் உள்ளன. குயிலே! நீ பாடுவது எனக்குப் பிடிக்கும். மயிலே! நீ ஆடுவது எனக்குப் பிடிக்கும். கிளியே! நீ பேசுவது எனக்குப் பிடிக்கும்'' என்று அந்த சிறுமி கூறினாள்.

சிறுமியின் பேச்சில் மூன்று பறவைகளும் மயங்கின. அவள் குரல் கிளியின் பேச்சை விட, அழகாகவும் குயிலின் பாட்டை விட, இனிமையாகவும் இருந்தது. அடுத்து அந்த சிறுமி உற்சாகமாகப் பாடிக்கொண்டே அழகாக ஆடினாள். அவளின் திறமையைக் கண்டு மூன்று பறவைகளும் வியந்தன.

''எங்களைவிட நீ அழகாகப் பேசுகிறாய். அருமையாகப் பாடுகிறாய். அற்புதமாக ஆடுகிறாய். உனக்கு உன் திறமையின் மீது கர்வம் கிடையாதா?'' என்று பறவைகள் மூன்றும் கேட்டன.

''கலைகள் அத்தனையும் இறைவன் கொடுத்த வரம். எனவே, அதில் கிடைக்கும் பெயரும் புகழும் இறைவனுக்கே சொந்தம். பெயர் புகழ் கிடைத்தாலும், பணிவோடு இருக்க வேண்டும். நம் திறமையால் புகழ் வரும்போது கர்வம் இன்றி, இருக்க வேண்டும். இப்படி எங்க அப்பா எனக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்'' என்றாள், அந்தச் சிறுமி.

இதைக் கேட்ட பறவைகள் மூன்றும் ''குழந்தையே, உன்னால், எங்களின் கர்வம் காணாமல் போய்விட்டது. புகழ் வரும்போது தலைக்கனம் கூடாது என்று தெரிந்துகொண்டோம். எல்லாப் புகழும் இறைவனுக்கே'' என்று கூறி மயில், கிளி, குயில் ஆகிய மூன்று பறவைகளும் தமது கர்வத்தைவிட்டு விட்டு சந்தோஷமாகப் பறந்து சென்றன.

# உபத்திரவமாகிய உதவி



பூனையைக் கண்டதும் எலி வேகமாகத் தப்பி தோட்டத்திற்குள் ஓடியது.

இதனால், கோபமடைந்த பூனை, ''அட அற்ப பதரே, என்னிடம் சிக்காமல் ஆட்டமா போட்டுக்கொண்டிருக்கிறாய்? உன்னைப் பிடித்து என்ன செய்கிறேன் என்று பார்? உன்னை இரையாக்காமல் இன்று விடமாட்டேன். நீயா, நானா? இரண்டில் ஒன்றைப் பார்த்து விடுவோம்'' என்று கூறியபடியே பூனை எலியை விடாமல் துரத்தியது.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த முயல், எலிக்காக பரிதாபப்பட்டு உதவ நினைத்தது. ''எலியாரே, என் புதருக்குள் வந்து ஒளிந்து கொள்ளுங்கள். சீக்கிரம் வாருங்கள்'' என்று அழைத்தது. எலியும் முயலுடன் புதருக்குள் ஒளிந்து கொண்டது.

பூனை தன் கோபக் கண்களால் தோட்டம் முழுவதையும் சல்லடை போட்டுத் தேடியது. ''புதருக்குள் எங்கோ, ஓடி ஒளிந்து கொண்டாயா? சரி இப்போது போகிறேன். இன்னொரு நாளைக்கு வந்து உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்று கோபத்துடன் கூறிவிட்டுப் போனது.

பூனை சென்று விட்டதை அறிந்த முயல், ''நண்பரே! பூனை சென்று விட்டது. சீக்கிரம் உங்கள் இடத்திற்குச் சென்றுவிடுங்கள்'' என்றது.

''முயலே! எனக்கு இதைவிட பாதுகாப்பான இடம் வேறு எதுவும் இருக்காது. அதனால், நீ வேறு இடத்தைப் பார்த்துக் கொள்'' என்று ஆணவத்துடன் எலி கூறியது.

''ஐயோ! என்ன இது? இடத்தைக் கொடுத்தால், மடத்தைப் பிடித்த கதையாக இருக்கிறதே! உன் உயிர் காக்க உதவியதற்கு இதுவா நீ செய்யும் நன்றி?'' என்று கண் கலங்கியது முயல்.

''இதோ பார். எனக்கு என் உயிர்தான் முக்கியம். நீ இந்த இடத்தை விட்டு போகாவிட்டால் நான் உன்னைக் கடித்துக் கொன்றுவிடுவேன்'' என்று முயலைக் கடிக்க முயன்றது.

முயல், பயந்து 'தீயவர்களுக்கு உதவினால், அதனால் வரும் துன்பத்தை உதவியவர் அனுபவித்தே ஆக வேண்டும்' என்று எண்ணியபடி வேறு தோட்டத்திற்கு ஓடியது.

அப்போது, எலிக்குப் பசி எடுக்கவே, புதருக்குள் இருந்தபடியே தோட்டத்தை எட்டிப் பார்த்தது. மாம்பழம் ஒன்று மரத்தில் இருந்து கீழே விழுந்து கிடப்பதைக் கண்டு அதனைச் சாப்பிட ஓடிச் சென்றது.

அதேநேரம் அங்கு நீண்ட நேரமாக மறைந்திருந்த பூனை அதனைக் கௌவிப் பிடித்துக்கொண்டது. ''நீ எப்படியும் வெளியே வருவாய் என்றுதான் காத்திருந்தேன். நான் நினைத்தது வீண்போகவில்லை. உனக்கு இருக்க இடம் கொடுத்த முயலையும் துரத்தி விட்டாய். அது அழுதபடி சென்றதைப் பார்த்தேன். உன்னைக் காப்பாற்ற இடம் கொடுத்த முயலையே விரட்டி விட்ட நீ, வாழத் தகுதி இல்லாதவன்'' என்று அதைக் கடித்துக் குதறியது பூனை.

ஒருவருக்கு உதவி செய்யும்போது, அந்த உதவியைப் பெற, அவர் தகுதியானவர்தானா? என்று சிந்தித்தே உதவ வேண்டும். இல்லாவிட்டால், உதவி செய்த நமக்கே அது ஆபத்தாக அமைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மா-அப்பா-மகன்-மகள் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்

**තාත්තා:** **දුව, අපි මේ පැත්තේ ආසනවල ඉඳ ගමු.**
துவ, அபி மே பெத்தே ஆசனவள இந்த கமு.
அப்பா: **மகள், நாங்கள் இந்தப் பக்கத்து ஆசனங்களில் அமர்வோம்.**

**දුව:** **අයියේ! මට ජනේලය ළඟ දෙන්න.**
அய்யே! மட்ட ஜனேலய லங்க தென்ன.
மகள்: **அண்ணா! எனக்கு ஜன்னல் ஓரம் தாருங்கள்.**

**අම්මා:** **දුව, ඔයා මේ පැත්තේ ජනේලය ළඟට එන්න.**
துவ, ஒயா மே பெத்தே ஜனேலய லங்கட்ட என்ன.
அம்மா: **மகள், நீங்கள் இந்தப் பக்கம் ஜன்னல் அருகே வாருங்கள்.**

**දුව:** **දැන්ම කෝච්චිය යයිද තාත්තේ?**
தென்ம கோச்சிய யய்த தாத்தே?
மகள்: **புகையிரம் இப்பவே புறப்படுமா அப்பா?**

**තාත්තා:** **හරියට හතයි තිහට යයි.**
ஹறியட்ட ஹதய் திஹட்ட யய்.
அப்பா: **சரியாக ஏழரை மணிக்குப் புறப்படும்.**

**පුතා:** **දැන්නම් වෙලාව හරි. අන්න නලාව පිඹිනවා. සිග්නල් කොඩිය වැනුවා.**
தென்னம் வெலாவ ஹறி. அன்ன நலாவ பிம்பினவா.
சிக்னல் கொடிய வெனுவா.
மகன்: **இப்போது நேரம் சரி. அதோ விசில் ஊதப்படுகிறது. சமிக்ஞைக் கொடியும் அசைக்கப்படுகிறது.**

**දුව:** **අයියේ! කෝච්චිය හරි වේගයෙන් යනව නේද?**
அய்யே! கோச்சிய ஹறி வேகயென் யனவ நேத?
மகள்: **அண்ணா! புகையிரதம் வேகமாகச் செல்கிறது அல்லவா?**

**පුතා:** **ඔව් නංගි. මේක සීඝ්‍රගාමී දුම්රියනේ.**
ஒவ் நங்கி. மேக சீக்ரகாமி தும்ரியனே.
மகன்: **ஆம் தங்கச்சி. இது கடுகதி புகையிரதம்தானே.**

**දුව:** **නුවරට හුඟක් දුරද තාත්තේ?**
நுவரட்ட ஹுங்கக் துரத தாத்தே?
மகள்: **கண்டிக்கு மிகத் தூரமா அப்பா?**

**තාත්තා:** **ඔව් දුව. නුවර යනකොට නවයයි තිහ විතර වෙයි.**
ஒவ் துவ. நுவர யனகொட்ட நவயய் திஹ விதர வெய்.
அப்பா: **ஆம் மகள். கண்டிக்குப் போகும்போது ஒன்பதரை மணியளவு ஆகும்.**

**பயிற்சி**

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. எனக்கு ஜன்னல் ஓரம் தாருங்கள்.
.......................................................

ii. இப்போது நேரம் சரி.
.......................................................

iii. இது கடுகதி புகையிரதம்.
.......................................................






**'Unless' எனும் இணைக்கும் சொல்லைக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப்படுகின்ற கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) மேலும் இங்கே பயில்வோம். இவை, நிபந்தனைகளுடன்கூடிய (Conditions) கலப்பு வாக்கியங்கள் என்பதை நாம் ஞாபகத்தில்கொள்ள வேண்டும்.**

(அ) நாங்கள் அங்கே போகாவிட்டால், எங்களால் அவர்களை சந்திக்க முடியாது.
Unless we go there, we can't meet them.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- நாங்கள் அங்கே போகாவிட்டால்,
  Unless we go there,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- எங்களால் அவர்களை சந்திக்க இயலாது.
  We can't meet them.
  (பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஆ) ராஜனுக்கு திறப்புக் கிடைக்காவிட்டால், அவனால் கதவைத் திறக்க இயலாது.
Unless Rajan gets the key, he can't open the door.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- ராஜனுக்கு திறப்புக் கிடைக்காவிட்டால்,
  Unless Rajan gets the key,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- அவனால் கதவைத் திறக்க முடியாது.
  He can't open the door.
  (பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(இ) நீ எனக்கு உண்மையைக் கூறாவிடில், நான் உனக்கு உதவ மாட்டேன்.
Unless you tell me the truth, I won't help you.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- நீ எனக்கு உண்மையைக் கூறாவிடில்,
  Unless you tell me the truth,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- நான் உனக்கு உதவ மாட்டேன்.
  I won't help you.
  (பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஈ) ஜோன் உரிய நேரத்துக்கு மருந்து உட்கொள்ளாவிட்டால், அவன் சுகமடைய மாட்டான்.
Unless john takes medicine on time, he won't get well.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- ஜோன் உரிய நேரத்துக்கு மருந்து உட்கொள்ளாவிட்டால்,
  Unless John takes medicine on time,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- அவன் சுகமடைய மாட்டான்.
  He won't get well.
  (பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(உ) நான் விடுமுறை ஒன்றைப் பெறாவிடில், என்னால் அங்கே வர இயலாது.
Unless I have a holiday, I can't come there.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- நான் விடுமுறை ஒன்றைப் பெறாவிடில்,
  Unless I have a holiday,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- என்னால் அங்கே வர இயலாது.
  I can't come there.
  (பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)


**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# ஒபாமாவிற்கு எதிராக மிட்ரொமி முன்னணியில்....



நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் எதிரணியான ரிப்பப்ளிக்கன் கட்சி தெரிவுசெய்துள்ள வேட்பாளர்களில் மிட்ரொமி என்பவர் முன்னணி வகிப்பதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

இவர் முன்வைத்துள்ள வித்தியாசமான பொருளாதார கொள்கைத் திட்டங்களின் காரணமாகவே, இந்தளவிற்கு இவரால் முன்னிலைக்கு வரமுடிந்துள்ளதாக செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ரிப்பப்ளிக்கன் கட்சிக்குள் நடைபெறுகின்ற உள்ளக வாக்கெடுப்பு முறையின் கீழேயே உரிய வேட்பாளர் தெரிவு உறுதிசெய்யப்படும். எனவே, இந்த வாக்கெடுப்பு முறைகள் இன்னமும் முடிவடையாத நிலையில் இதுவரை உள்ள நிலைவரத்தின்படி, இறுதி மூன்று வேட்பாளர்களாக மிட் ரொமி, ரொன்போன் மற்றும் ரிக்கி சென்டோரம் ஆகியோர் போட்டிக் களத்தில் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

# இளவரசர் ஹரி எவரெஸ்டில் ஏறவுள்ளார்





பிரிட்டனின் இளவரசர் ஹரி 'எவரெஸ்ட்' சிகரத்தில் ஏறுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அநேகமாக, எதிர்வரும் மே மாதம் அளவில் இளவரசர் ஹரி எவரெஸ்டில் ஏறுவதற்குத் தயாராகி வருவதாகவும் இதில் குறிப்பிடப்படுகின்றது. ஆனால், இதுகுறித்து பக்கிங்ஹம் அரண்மனையின் சார்பாக கருத்துத் தெரிவிக்க வேண்டிய பேச்சாளர்கள் வெளிப்படையாக எதனையும் இன்னும் தெரிவிக்கவில்லை என்பதும் அவரது இராணுவப் பணி சம்பந்தமான கால அட்டவணையின்படியே, இது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கனவே, இராணுவ வீரர்களுக்கு உதவுவதற்காக, நிதி திரட்டு முகமாக வடதுருவத்திற்கு இவர் பயணம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 342

**கேள்வி:** அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தலில் ஒபாமாவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு அதிக வாய்ப்புள்ளவராகக் கருதப்படுகின்ற 'மிட்ரொமி' என்பவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

**சரியான விடை.................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 342,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 340 இன் சரியான விடை: கிம்ஜோங்உன்

**பரிசு பெறுவோர்**

சு.ஆர்த்திகா,
தொல்புரம், சுழிபுரம்.

ஜெ. அபிலாஷினி,
கண்டி வீதி, சுமேதகம,
திருகோணமலை.

ஸ்ரீ.சுபாஷ்,
மகாவித்தியாலய மாவத்தை, கொழும்பு-13

# சீனாவின் முப்பரிமாண தொலைக்காட்சி ஆரம்பம்



சீனாவில் முதல் தடவையாக 3டி (முப்பரிமாண) தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே, இதன் பரிட்சார்த்த ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஜனவரி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் இந்த '3டி' ஒளிபரப்பு உத்தியோகபூர்வமாக ஒளிபரப்பை ஆரம்பிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒளிபரப்பில் கலை நிகழ்ச்சிகள், திரைப்படம், விளையாட்டு, கார்ட்டூன் போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.





முப்பரிமாண தொலைக்காட்சி சேவையை ஆரம்பிப்பதானது, சீனாவின் ஒளிபரப்பு வரலாற்றில் விசேட சாதனையாகவே கருதப்படுவதாகவும், சீனாவின் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களின் தலைவர் கய்புகோவ் தெரிவித்துள்ளார்.

# தெரிந்து கொள்வோம்



* பசுபிக் சமுத்திரத்தினை விட உவர்ப்பான சமுத்திரம் எது?
  அத்திலாந்திக்



* வெனிசுவெலாவில் அமைந்துள்ள ஏஞ்சல் நீர்வீழ்ச்சியானது, நயகரா நீர்வீழ்ச்சியை விட எத்தனை மடங்கு உயர்வானது?
  அண்ணளவாக 20 மடங்கு உயரமானதாகும்
* ஏக்கருக்கு 2 சதங்கள் வீதம் செலுத்தி அமெரிக்காவினால் ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மாநிலம் எது?
  எலஸ்கா மாநிலம்



* முட்டையிலிருந்து குஞ்சு பொரிக்கும் ஆண் இன மீன் எது?
  கடற்குதிரை



* பிரான்ஸ் நாட்டிலுள்ள ஈபிள் கோபுரத்தில் எத்தனை ஆணிகள் உள்ளன?
  2,500.000
* கடல் மட்டத்திற்கு கீழே நிலப்பகுதியினைக் கொண்டிராத ஒரே கண்டம் எது?
  அந்தாட்டிக்கா கண்டம்




* பூரானுக்கு எத்தனை கால்கள்?
  40



* ஹம்மிங் பேர்ட் பறவையின் இதயம் நிமிடத்துக்கு எத்தனை தடவை துடிக்கும்?
  1,400 தடவைகள்



* நீல நிறத்தினை அடையாளம் காணக் கூடிய ஒரே பறவை எது?
  ஆந்தை
* 3 மாதங்கள் உணவின்றித் தொடர்ந்து நீந்தக்கூடிய உயிரினம் எது?
  திமிங்கிலம்
* 1066 ஆம் ஆண்டு தொடக்கம் 1326 ஆம் ஆண்டு வரையான 300 ஆண்டு காலப்பகுதியில் இங்கிலாந்தின் உத்தியோகபூர்வ மொழியாக விளங்கிய மொழி எது?
  பிரெஞ்ச்



* உலகிலேயே சிறகில்லாத ஒரே ஒரு பறவை எது?
  நியூஸிலாந்தின் கிவி பறவை



* நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்குப் பேசுவதற்கு அனுமதி இல்லாத நாடு எது?
  இங்கிலாந்து



* மிசிசிப்பியை விட நீளமான நதி எது?
  மிசூரி

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறப்புக்களுடன் ஜெக் கெலிஸ்



சதமடித்தபோதே, ஜெக் கெலிஸ் தான் போட்டியிட்ட அனைத்து நாடுகளுடனும் சதம் அடித்தவர் என்ற பெருமையைப் பெற்றார். இதேவேளை, டெஸ்ட் போட்டிகளில் அதிக எண்ணிக்கையிலான சதம் அடித்தவர்களின் பட்டியலில் இவர் இரண்டாம் இடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்திய அணியின் சச்சின் டென்டுல்கர்தான் இதில் முதலாவது இடத்தில் உள்ளார்.

இதேவேளை, இலங்கையுடனான குறித்த டெஸ்ட்டின்போது, மேலும் சில சிறப்புக்களையும் ஜெக்கெலிஸ் பெற்றுள்ளார். புதுவருடத்தில் முதலாவது சதம் அடித்தவர், 150 ஆவது டெஸ்டில் கலந்துகொண்ட பெருமை, பீற்றர்சனுடன் இணைந்து 3 வது விட்கெட் இணைப்பாட்டமாக 205 ஓட்டங்களைப் பெற்றமை மற்றும் கேப்டவுன் மைதானத்தில் மொத்தமாக 2000 ஓட்டங்களைப் பெற்றமை ஆகியனவே ஜெக் கெலிஸ் பெற்ற மேலதிக சிறப்பு அம்சங்களாகும்.

டெஸ்ட் விளையாடும் அனைத்து நாடுகளுக்கும் எதிராக சதமடித்தவர்களின் பட்டியலில் தென்னாபிரிக்க வீரர் ஜெக் கெலிஸ் 12 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கை அணியுடனான டெஸ்ட் போட்டியின்போது, இரட்டை

# கிரிக்கெட் சபைக்கு நிர்வாகிகள் தெரிவு



இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாக பதவிகளுக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கென நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் உபாலி தர்மதாஸ போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார். இதேவேளை, மேற்படி சபையின் செயலாளராக நிஷாந்த ரணதுங்க தெரிவாகியுள்ளதுடன், உப தலைவர்களாக அஸங்க செனவிரத்ன, மதிவாணன் மற்றும் பொருளாளராக நுஸ்கி மொஹமட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2004 ஆம் ஆண்டில் திலங்க சுமதிபாலவின் தலைமையில் இருந்த கிரிக்கெட் சபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுநாள் வரை இடைக்கால நிர்வாக சபையினாலேயே கிரிக்கெட் சபை நிர்வகிக்கப்பட்டு வந்தமையும், நீண்டகாலமாக தேர்தல்மூலம் இப்பதவிகள் நிரப்பப்படாமல் தாமதப்படுத்துவதை சுட்டிக் காட்டியிருந்த சர்வதேச கிரிக்கெட் சபை கூடிய விரைவில் தேர்தலை நடத்தி உரியவர்களை தேர்ந்தெடுக்குமாறும் விளையாட்டுத்துறை அமைச்சைக் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், இத்தேர்தல் நடைபெற்ற விதம் குறித்து ஏனைய வேட்பாளர்கள். அதிருப்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# ஒலிம்பிக்கில் சூதாட்டம்: தடுப்பதற்கு சிறப்புப் படை

லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் சூதாட்டம் நடைபெறாமல் தடுப்பதற்காக, தனிப் படையொன்றை பிரிட்டன் அமைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடம் ஜூலை மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. மேற்படி ஒலிம்பிக் போட்டிகளின்போது, யார் யார் வெற்றி பெறுவார்கள், எந்த நாடு எத்தனையாம் இடத்தைப் பெறும் போன்ற விடயங்களை அடிப்படையாக வைத்து அநேகர் பந்தயம் பிடிப்பதுண்டு. இந்த பந்தயப் பணத்தை சூதாட்ட தரகர்களிடமே இவர்கள் செலுத்துவார்கள்.

எனவே, இந்த தரகர்கள் செய்கின்ற ஒரு வியாபார சூழ்ச்சி என்னவென்றால், யார் வெற்றி பெறுவார்கள் என்று அதிகளவில் பந்தயப்பணம் கட்டப்படுகின்றதோ, அந்த குறித்த வீரர்களுடன் தரகர்கள் ரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களை வலியவே போட்டியிலிருந்து தோல்வியடையுமாறு கேட்டுக்கொள்வர். இதற்குப் பெருமளவில் பணம் தருவதாகவும் உறுதி அளிப்பர். எனவே, குறித்த வீரர்கள் தோல்வி அடையும் பட்சத்தில் அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்ற நம்பிக்கையில் பந்தயப் பணம் கட்டியவர்கள் பந்தயப் பணத்தை இழப்பர். இது அந்த சூதாட்ட தரகர்களுக்குப் பாரிய வருமானமாக இருக்கும். இதில் ஒரு பங்கினை அவர்கள் போட்டியாளர்களுக்கு வழங்கிவிட்டு, மிகுதியைத் தமது வருமானமாக ஈட்டிக்கொள்வர்.

எனவே, லண்டன் ஒலிம்பிக்கிலும் இவ்வாறு நடைபெறக்கூடும் என்பதனாலேயே, சர்வதேச ஒலிம்பிக் சங்கம் உஷாராக உள்ளது. இதற்கமைய, 'பிரிட்டன் அரசாங்கம் சிறப்பு புலனாய்வுப் படையையும் அமைத்துள்ளது. இவர்களால், போட்டியாளர்களும், தரகர்களும் மிக உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஷேவாக்கிற்கு விளம்பர வருமானம் அதிகரிப்பு...



இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ஷெவாக் மேற்கிந்திய தீவுகள் அணியுடன் அண்மையில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் 219 ஓட்டங்களைப் பெற்று ஒருநாள் போட்டி வரலாற்றில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர் என்ற உலக சாதனையை நிகழ்த்தியமை அறிந்ததே. இதனால், தற்போது ஷெவாக்கை நாடி ஏராளமான விளம்பரங்கள் வரத் தொடங்கியுள்ளனவாம்.

அதுமட்டுமன்றி, ஷேவாக்கிற்கு டெல்லி கிரிக்கெட் சங்கம் இந்திய ரூபாயில் 25 லட்சம் பரிசாக வழங்கியுள்ளது. முக்கிய நிறுவனங்கள் பல ஷேவாக்கை தமது நிறுவன விளம்பரங்களில் ஒப்பந்தம் செய்வதற்குப் போட்டிபோடுகின்றன. வழமையாக ஷெவாக் ஆண்டொன்றிற்கு ரூபா இரண்டு கோடி அளவில் விளம்பரங்களுக்காக அறவிட்டு வந்தார். இந்நிலையில் தற்போது, அவரது மவுசு உயரத் தொடங்கியுள்ள நிலையில் விளம்பரங்களின்மூலம் மேலதிகமாக ரூபா 10 கோடியை அவர் வருமானமாக ஈட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நேர்மையான வீரர் விருது டோனிக்கு



நேர்மையான விளையாட்டு வீரருக்கான விருதிற்கு இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி தெரிவு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச விளையாட்டுத்துறை ஊடக சங்கத்தினாலேயே இந்த விருது வழங்கப்படுகின்றது.

கடந்த வருடம் இங்கிலாந்தில் நடைபெற்ற இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின்போது, இயல்பெல்லின் ஆட்டமிழப்பை நடுவர் வழங்கியபோதிலும் எதேச்சையான சம்பவத்தின் காரணமாகவே, அந்த நிலை ஏற்பட்டமையினால் அதனை கவனத்தில் கொண்டு அவரை மீண்டும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவதற்கு டோனி அழைத்திருந்தார். டோனியின் இந்த கணவான் தனத்தைக் கௌரவிக்கு முகமாகவே, அவருக்கு நேர்மைக்குரிய வீரருக்கான விருது வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள விளையாட்டுத்துறை ஊடக, சங்கத்தின் ஆண்டுவிழாவின்போதே, டோனிக்கு இந்த விருது வழங்கப்பட இருந்தபோதிலும் அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் டோனி கலந்துகொள்கின்றமையால் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஐ பி எல் மற்றும் டுவெண்டி டுவெண்டி போட்டிகளின் ஆரம்ப விழாவின்போது, மேற்படி விருதை டோனிக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவின் சுற்றுப்பாதையில் 'க்ரெய்ல் செய்மதிகள்'




சந்திரனின் ஈர்ப்பு விசை மற்றும் அதன் அமைப்பு குறித்த முழுமையான விபரங்களைத் திரட்டுவதற்காக, விண்ணில் ஏவப்பட்ட 'க்ரெய்ல்-ஏ' (GRAIL-A) மற்றும் 'க்ரெய்ல்-பி' (GRAIL-B) ஆகிய இரண்டு செய்மதிகளும் நிலவின் சுற்றுப்பாதைக்குள் வெற்றிகரமாக பிரவேசித்ததாக நாஸா அறிவித்துள்ளது.

சந்திரனின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்ததைத் தொடர்ந்து இவ்விரு செய்மதிகளும் இரு மாதங்களுக்கு தொடர்ச்சியான வெப்பமேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடும். இதன் பின்னர், க்ரெய்ல் செய்மதிகள் தமது விஞ்ஞானப் பணிகளை ஆரம்பிக்க முடியும் என்று கெலிஃபோர்னியாவிலுள்ள கே.பி.எல். திட்ட முகாமையாளர் டேவிட் லெக்மான் தெரிவித்துள்ளார்.





இந்த செய்மதிகள் நிலவின் உட்புறத்தை மிகத் துல்லியமாக அளவிடும் எனவும் இதன்மூலம் சிறப்பான முடிவுகளை வானியலாளர்கள் பெறுவார்கள் எனவும் கூறப்படுகிறது. நிலவின் தோற்றம் எவ்வாறிருக்கின்றது?, நிலவின் அண்மைய மற்றும் தூரப் பகுதிகள் ஏன் வேறுபட்டுக் காணப்படுகின்றன? போன்ற வினாக்களுக்கு இந்த செய்மதிகள் மூலம் விடை அறியப்படலாம் என வானியலாளர்கள் நம்புகின்றனர். நிலவின் மேற்பரப்புகளில் உள்ள சிறிய ஈர்ப்பு மாற்றங்களை க்ரெய்ல் செய்மதிகள் அளவிடும். அத்துடன், சந்திரனின் ஈர்ப்புச் சக்தியின் தன்மைகளையும் இவை வரைபடமாக பதிவு செய்யும்.

இந்த ஈர்ப்புச் சக்தி வரைபடத்தின் மூலம் சந்திரனிலுள்ள பெரிய மலைத் தொடர்கள் மற்றும் ஆழமான பள்ளத்தாக்குகள் பற்றியும் அறிந்துகொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அதற்கமைய, நிலவின் தரைத்தோற்ற வேறுபாடுகளைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளையும் இந்த செய்மதிகள் கொண்டுள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்து சந்திரன் எவ்வாறு உருப்பெற்றது?, காலத்துக்கு காலம் சந்திரன் எவ்வாறு விருத்தியடைந்தது? என்பன தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளவும் இது முக்கியமான பங்களிப்பை வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கேப் கெனவரலில் உள்ள விமானப்படைத் தளத்தில் இருந்து டெல்டா 2 என்ற ரொக்கெட் மூலம் க்ரெய்ல் செய்மதிகள் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி விண்ணுக்கு ஏவப்பட்டன. அதி நவீன திறன்கொண்ட இந்த இரு செய்மதிகளும் 500 கோடி அமெரிக்க டொலர் செலவில் வடிவமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பூமியின் பருமனை ஒத்த புறக்கோள்கள் கண்டுபிடிப்பு

நமது சூரியனை ஒத்த விண்மீன் ஒன்றைச் சுற்றிவருகின்ற, பூமியின் பருமனை ஒத்த இரண்டு புறக்கோள்களை வானியலாளர்கள் முதற் தடவையாக கண்டுபிடித்துள்ளனர்.

இந்த இரண்டு புறக்கோள்களும் மிகவும் வெப்பமானதாக இருப்பதாலும் உயிர் வாழ்க்கைக்கு உகந்த வலயத்திற்கு வெளியே இருப்பதனாலும் தற்போது அங்கு உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று கூறப்படுகின்றது. ஆனாலும், இக்கோள்கள் முன்னர் தமது விண்மீனுக்கு மிகத் தொலைவில் இருந்துள்ளன என்றும் அப்போது அவற்றின் மேற்பரப்புக்களில் போதிய அளவுக்கு குளிர்மையாக இருந்திருக்கின்றன என்றும் ஹார்வர்ட்-ஸ்மித்சோனியன் ஆய்வு மையத்தைச் சேர்ந்த கலாநிதி ஃபிரெசின் தெரிவித்துள்ளார். அத்துடன், முன்னொரு காலத்தில் இக்கோள்களில் உயிரினங்கள் வாழ்ந்திருக்கலாம் எனவும் இவற்றில் ஒன்று நமது பூமியை ஒத்த இயல்புகளைக் கொண்டிருந்திருக்கக்கூடும் எனவும் வானியலாளர்கள் கருதுகின்றனர்.






இதில் ஒரு கோளுக்கு கெப்லர்-20f (Kepler-20f) என பெயரிடப்பட்டுள்ளது. இக்கோளானது, பூமியின் அளவைக் கொண்டுள்ளது. கெப்லர்-20e (Kepler-20e) என்று பெயரிடப்பட்டுள்ள மற்றைய கோள் பூமியை விட, 0.87 மடங்கு சிறியதாக காணப்படுகின்றது. எனினும், இவ்விரு கோள்களும் நமது பூமியை ஒத்த இயல்புகளையும் பாறைகளையும் கொண்டுள்ளன.



கெப்லர் விண்வெளித் தொலைநோக்கியூடாகவே, இந்த புறக்கோள்கள் இரண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.இத்தொலைநோக்கிமூலம் இதுவரையில் 35 புறக்கோள்கள் கண்டறியப்பட்டுள்ளன. கெப்லர் 20e, கெப்லர் 20f ஆகியவற்றைத் தவிர ஏனையவை அனைத்தும் பூமியை விட அதிக பருமன் கொண்டவையாகும்.

# சோயுஸ் ரொக்கெட் 6 செய்மதிகளுடன் பயணம்





ரஷ்ய சோயுஸ் ரொக்கெட்டானது, கசகஸ்தானிலுள்ள பைகனூர் விண் ஏவுதளத்திலிருந்து கடந்த மாதம் 28 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டதாக ரஷ்ய விண்வெளி முகவர் நிலையம் அறிவித்துள்ளது.

'சோயுஸ் 2.1a' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ரொக்கெட்டானது, ஆறு புதிய தொலைத் தொடர்பு செய்மதிகளை விண்ணுக்கு எடுத்துச் சென்றுள்ளது. இந்த செய்மதிகள் ஒவ்வொன்றும் 700 கிலோகிராம் எடை கொண்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விசேட BASIC / SPOKEN ENGLISH - தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவரக்குமென விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

பாடநெறியை தொடரும் உங்களுக்கு

இலவசமாக கடிதம் எழுதும் முறை பயிற்சி புத்தகம் ஒன்று

அழகிய T.SHIRT மற்றும் PHONE SIM CARD ஒன்று

என்பன அனைவருக்கும். இலவசமாக வழங்கப்படும்

எமது BASIC/SPOKEN / DIPLOMA IN ENGLISH சான்றிதழானது வேலை வாய்ப்பு பெற மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு (Embassy ) களுக்கு செல்லு படியாகும் இதனால் உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கும் VISA பெறவும் இது துணையாக அமையும்.


மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்திலும் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்: விஞ்ஞானம்



(1736 -1819)

# ஜேம்ஸ் வோட்

தோமஸ் அல்வா எடிசனுக்கு நிகராகப் போற்றப்படும் முக்கிய கண்டுபிடிப்பாளராக ஜேம்ஸ் வோட் கருதப்படுகின்றார். இவரே, நீராவி இயந்திரத்தின் செயற்பாட்டை அதிகப்படுத்தி, கைத்தொழில் புரட்சிக்கு வித்திட்டவராவார். விஞ்ஞான உலகில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய ஜேம்ஸ் வோட் ஸ்கொட்லாந்தில் 1736 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி பிறந்தார். அவரது பாட்டனார் ஒரு கணித ஆசிரியராவார். தந்தையார் சிற்பக் கலையிலும் கப்பல் கட்டுவதிலும் வல்லவர். தாயார் மிகச் சிறந்த பண்பாளராகவும் திகழ்ந்தார். வோட் சிறுவயதில் கடும் சுகயீன முற்றமையால், காலம் கழித்தே பாடசாலையில் சேர்க்கப்பட்டார். தந்தையின் சரியான வழிகாட்டலும் தாயின் அன்பும் அயராத முயற்சியும் அவர் வாழ்வின் வெற்றிப்படியை அடைய உறுதுணை புரிந்தன.

சிறுவயதிலேயே, இயந்திரத் தொழில்நுட்பங்களில் அதிக நாட்டம் கொண்ட வோட். இயந்திரங்களைப் பாகம் பாகமாகப் பிரித்து ஆய்வு செய்வதிலும் அவற்றைப் பொருத்துவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். எனினும், அவரது ஈடுபாடு இத்துறையுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. அவரது நாட்டங்கள் அதிவிசாலமானவை. பிரெஞ்ச், இலத்தீன், ஜேர்மன் மொழிகளிலும் இலக்கியம், தத்துவம், ஞானம், சங்கீதம் முதலிய துறைகளிலும் அவர் தேர்ச்சி பெற்றார். கைத்தொழில் புரட்சியின் மூல இயந்திரத்தைக் கண்டுபிடித்த இந்த மேதை விசாலமான பண்பாடும் அதிவிரிவான அறிவும் படைத்தவர். விஞ்ஞான நுட்பக் கருவிகளை திறம்பட உருவாக்கிய இவருக்கு கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் தொழில்வாய்ப்பும் கிடைத்தது.

ஆரம்ப காலங்களில் இவர் கொதிக்கும் கேத்தலில் இருந்தே நீராவி இயந்திரத்தின் தத்துவத்தைக் கற்றறிந்தார் என்று கூறப்படுகின்றது. எனினும், இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 1764 ஆம் ஆண்டு தனது 28 ஆவது வயதில் நீராவியின் அமுக்கத்தைப் பற்றிய பரிசோதனைகளில் இவர் ஈடுபட்டிருந்த வேளையில் அவரது வாழ்வின் அதிமுக்கியத்துவம் மிகுந்த சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பல்கலைக்கழகப் போதனைக்குரிய உபகரணமாக வைக்கப்பட்ட நீராவி இயந்திரம் ஒன்று செயற்பட மறுத்தது. இந்த இயந்திரம் தோமஸ் சவேரி என்பவரால் உருவாக்கப்பட்டு, பின் 1712 இல் தோமஸ் நியுகொமனால் என்பவரால் மறுசீரமைக்கப்பட்ட சற்று செயற்திறன் கூடிய இயந்திரமாகும். அதனை பழுது பார்க்கும் முயற்சியில் வோட் இறங்கினார். அதை முறையாக ஆராய்ந்த பின் அந்த இயந்திரம் பிழையான விஞ்ஞான தத்துவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்ற முடிவுக்கு வந்தார்.

அதே ஆண்டு வோட் சகலதுறையிலும் சக்தியின் உற்பத்திச் சாதனமாக அமையப்போகும் இயந்திரத்தின் அடிப்படை விஞ்ஞானத் தத்துவங்களை எடுத்துரைத்தார். பொருளாதார காரணங்களினால் முதலில் தனது எண்ணங்களை செயற்படுத்த முடியாவிட்டாலும், பின்னர் மெத்தியூ பூல்ட்டன் என்ற உற்பத்தியாளரின் ஆதரவினால் முதலாவது நீராவி இயந்திரத்தை அவர் உருவாக்கினார். தமது ஓய்வின் பின்னரும் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்த ஜேம்ஸ் அதன் விளைவாக, துணிகளை உலர வைக்கும் இயந்திரம், காற்றில் இருந்து விஷவாயுக்களைப் பிரித்தெடுக்கும் கருவி, ஒப்படர்த்தி (Specific Gravity) அளக்கும் கருவி, அரிதான சிற்பங்களை மீண்டும் உருவாக்கும் இயந்திரம் என பல கருவிகளைக் கண்டுபிடித்தார். இத்தகைய பெருமைக்குரிய ஜேம்ஸ் வோட் அவர்கள் 1819 ஓகஸ்ட் 25 ஆம் திகதி இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்றார்.

ஆர்.ஜே

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4446

ஏ.எஃப். அஃப்ரா, புத்தளம்.



அங்.இல: 4447

கு.வித்தகன், கொழும்பு வீதி, கண்டி.



அங்.இல: 4448

ந. அனுசிகா, கலவெட்டித்திடல், புளியம்பொக்கணை.



அங்.இல: 4449

எம்.எச்.அஃனஃப், முருததஹாமுல்ல, கெலிஓயா.



அங்.இல: 4450

அல்ஃபான் அஹமட், கொஹுனுகமுவ வீதி, வெலிகம.



அங்.இல: 4451

க.விதுர்ஷன், ரமேஸ்புரம், செங்கலடி.



அங்.இல: 4452

எம்.எம்.ஹிக்மா, உக்கல வீதி, அக்குறனை.



அங்.இல: 4453

க.மிறோஜினி, குறிஞ்சாமுனை, கன்னன்குடா.



அங்.இல: 4454

ஏ. அப்ரி, கரிமா மன்ஸில், கலுல்வெல.




அங்.இல: 4455

எம்.பிரதீப், டயரயா தோட்டம், பண்டாரவளை.

# பாலைவன சொர்க்கம்!

இயற்கை அதிசயங்கள் மிதமிஞ்சிக் காணப்படும் இடங்களை பூலோக சொர்க்கம் என கூறுவது உண்டு. ஆனால், பாலைவன சொர்க்கம் பற்றி கேள்விப்பட்டது உண்டா? ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இந்த பாலைவன சொர்க்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திரும்பும் பக்கமெல்லாம், பல வண்ணங்களில் பூத்துக் குலுங்கும் மலர்கள், பசுமை நிறைந்த புல்வெளி என, கண்ணுக்குக் குளிர்ச்சியாக இந்த பாலைவனம் உருவாக்கப்பட்டுள்ளது.









இங்கு உயரமான இடங்களில் தொங்க விடப்பட்டுள்ள 2,965 கூடைகளில், கண்ணைக் கவரும் அழகிய மலர்கள் தொங்குகின்றன. இதனைப் பார்ப்பதற்கு தொங்கு தோட்டம் போலவே உள்ளது. மலர்களாலேயே பிரமிட்டுகள், ஒட்டகம், யானை, ஈஃபிள் கோபுரம் ஆகியவையும் உருவாக்கப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் இங்கு பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் ஒளிரும் போது, சொர்க்கமே கீழிறங்கி வந்துவிட்டது போல இருப்பதாக, பார்வையாளர்கள் கூறுகின்றனர். 21 ஆயிரம் சதுர அடியில் உருவாக்கப்பட்டுள்ள இத்தோட்டம் கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது.

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:....................................

முகவரி:....................................

....................................

பாடசாலை:....................................

வகுப்பு:....................................

திகதி:....................................


ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகில்களின் உருவாக்கம்










சூரியக்கதிர்கள் புவியின்மீது விழுவதனால் புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலம் வெப்பமடைகின்றது. சூரியனின் இந்தக் கதிர்வீச்சினை 'குற்றலைக் கதிர்வீச்சு' எனக் கூறுவர். இவ்வாறான வெப்பத்தைப் பெறும் புவியின் மேற்பரப்பும் வளிமண்டலமும் மீண்டும் கதிர்களை வீசுகின்றன. இதனை 'நெட்டலைக் கதிர்வீச்சு' என்பர். இந்தக் கதிர்வீச்சின்மூலம் பூமியில் மண், நீர், தாவரங்கள் போன்றவற்றில் உள்ள நீர் வெப்பமடைந்து நீராவியாகி வளி மண்டலத்தை சென்றடைகின்றது. இவ்வாறு செல்லும் நீராவியானது, வளிமண்டலத்தை நோக்கி உயரே செல்லச் செல்ல ஒடுக்கமடைவதால், உருவமும் அதன் பல்வேறுபட்ட ஒடுங்கும் நிலைகளும் முகில்களாக அதாவது மேகங்களாகத் தோன்றுகின்றன.

இவை, தாழ்முகில்கள், நடுத்தர முகில்கள், உயர் முகில்கள் என மூன்று முக்கிய வகைகளாகக் காணப்படுகின்றன. இவற்றிடையே மேலும் பல உட்பிரிவுகளும் உள்ளன. முகில்களின் நிறம், அடர்த்தி, அதன் உயரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அவற்றை பலவகைகளாகப் பிரிக்கின்றனர். தரையில் இருந்து 8,000 அடி உயரத்துக்குட்பட்ட பகுதியில் தாழ் முகில்களும் 8,000-20,000 அடி வரையில் நடுத்தர முகில்களும் 20,000-40,000 அடி வரை உயர் முகில்களும் காணப்படுகின்றன. வெப்பநிலை குறையும்போது, முகில்கள் மேலும் ஒடுங்கி நீர்த்துளிகளாகின்றன. இவையே மழையாகத் தரையை வந்தடைகின்றன.

# நோய் அகற்றும் நுண்ணிய காந்தங்கள்







எமது உடலின் குருதியில் இருந்து தீங்கு விளைவிக்கும் மூலக்கூறுகளை ஈர்த்தெடுத்து அகற்றக்கூடிய காந்தப்புலம் வாய்ந்த நுண்ணிய துகள்களை (Nanopaticles) சுவிற்சர்லாந்தின் சூரிச் நகர மருத்துவ ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும், குருதியைச் சுத்தப்படுத்த இது ஒரு சிறந்த வழிமுறை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். நச்சுப் பாதிப்பு, குருதியோட்டத் தொற்று மற்றும் சில குறிப்பிட்ட வகை புற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்தத் தொழில்நுட்பம் பெரிதும் உதவிபுரியும் என்று ஆய்வாளர்கள் மேலும் கூறுகின்றனர்.

இந்த காந்தப்புல நுண்ணிய துகள்கள் காபன் பூச்சு செய்யப்பட்டு, குருதியில் இருந்து அகற்றவேண்டிய பொருட்களுக்கு ஏற்ற நோய் எதிர்ப்புத் திறன்கள் சேர்க்கப்பட்டதாக இருக்கின்றன. மேலும், இவை குருதியோட்டத்தில் செலுத்தப்பட்டு பின்னர் டயாலிஸிஸ் (சிறுநீரகம் பழுதடையும்போது, குருதியை கருவி ஒன்றின்மூலம் சுத்தப்படுத்தல்) செய்வதன்மூலம் தீங்கு விளைவிக்கும் புரதங்கள், காரீயம் போன்ற உலோகங்களையும் அகற்றலாம் என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு பல்வேறு விதமான முறைகளில் உடலைப் பாதுகாக்கும் இந்த நுண்ணிய காந்தங்கள் உடலுக்கு எவ்வித தீங்கையும் விளைவிக்காது என்பதுடன், குருதியோட்டத்தின் பிற பணிகளிலும் குறுக்கிடாது என்றும் விஞ்ஞானிகள் உறுதியளிக்கின்றனர்.

# மழையைப் பெய்விக்கும் பக்றீரியா





சூரியஒளி காரணமாக கடல் அல்லது நீர் நிலைகளில் காணப்படும் நீரானது, நீராவியாக மேல் எழுந்து வானில் குளிர்வடைந்து பின் புவியை நோக்கி நீர்த்துளியாக விழுவதே 'மழையாகும்'. இவ்வாறான மழையைப் பெய்விக்க பக்றீரியாவே காரணம் என கண்டறிந்துள்ளனர்.






அமெரிக்காவின் மொன்டனா மாநில பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

தாவரங்கள் மீது படரும் ஒருவகையான பக்றீரியாக்கள் காற்றின்மூலம் வளிமண்டலத் திற்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும், இந்த பக்றீரியாக்கள் மீது பனிக்கட்டிகள் பல மடங்காகப் பெருகி, மழை மேகங்களாக மாறுவதாகவும் இவையே சில குறிப்பிட்ட வெப்பநிலையில் மழையாகப் பொழிவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த பக்றீரியாக்கள் உலகம் முழுவதும் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுவதுடன், மழை பெய்யும் காலங்களிலேயே இவை பெருகி வளர்கின்றன. இவற்றின்மூலம் வறண்ட பகுதிகளிலும் மழையை உருவாக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. 33 டிகிரி செண்டிகிரேட் வெப்பநிலைக்கு உட்பட்ட இடங்களில் மட்டுமே இந்த பக்றீரியாக்கள் வளர்ச்சி பெற முடியும். ஆனால், தற்போது உலகம் வெப்பமயமாகி வருவதனால், இவை அழிந்துபோகும் நிலைகூட ஏற்படலாம். ஆகவே, இந்த பக்றீரியாக்களை செயற்கை முறையில் உருவாக்குவது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மழையை அளக்கும் கருவி







மழை அல்லது பனியை அளப்பதற்கு மழைமானி பயன்படுகின்றது. பொதுவாக இது, 100 மில்லிமீற்றர் அல்லது 200 மில்லிமீற்றர் என்ற அளவுகளில் காணப்படும். சாதாரணமாக, ஒரு மழைமானி ஆடி (கண்ணாடி) அல்லது உலோகத்தினால் உருவாக்கப்படுகின்றது. இது இரண்டு நீண்ட உருளைகளையும் ஒரு புனலையும் கொண்டுள்ளது. உட்புற உருளையில் 0-25 மில்லிமீற்றர் வரையில் அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும். உட்புற உருளையின் மேல் உள்ள புனல், மழை நீரை உருளையினுள் செலுத்துமாறு அமைக்கப்பட்டிருக்கும். உட்புற உருளையில் மழைநீர் நிறைந்த பின் மேற்புற உருளையில் மீண்டும் நீர் சேகரிக்கப்படும்.

மழைமானியை பொதுவான இடையூறுகள் அற்ற திறந்த வெளியில் வைக்க வேண்டும். நேரத்தைக் குறித்துக் கொண்டு 24 மணித்தியாலத்தின்பின் மழைமானியில் உள்ள நீரின் அளவை மில்லிமீற்றர் அளவில் அளக்க வேண்டும். ஒரு மில்லிமீற்றர் அளவு என்பது (ஒரு லீற்றர்) ஒரு சதுர மீற்றருக்குச் சமமாகும். ஒரு ஊரில் பெய்துள்ள மழையைக் கணக்கிடுவதானால், அவ்வூரின் பரப்பளவை தெரிந்திருந்தால் மட்டுமே மழைவீழ்ச்சியின் அளவைக் கணிப்பீடு செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஆம் ஆண்டு அறிமுகமான தொழில்நுட்பங்கள்

*சென்ற 2011 ஆம் ஆண்டில், பல நிறுவனங்கள் அறிமுகப்படுத்திய புதிய தொழில் நுட்பங்களும், சாதனங்களும் தோல்வியைத் தழுவின. ஆனால், சில நிறுவனங்கள் கொண்டு வந்த தொழில்நுட்பத்திற்கு சிறந்த வகையில் வெற்றியும் மக்களிடையே அந்த சாதனங்களுக்கு வரவேற்பும் இருந்தன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்*

**✱ அப்பிள் நிறுவனத்தின் 'சிரி' (siri):** அப்பிள் நிறுவனம் வழங்கிய ஐ போன் 4 எஸ் (iphone 4s) மக்கள் எதிர்பார்த்த பல மாற்றங்களுடன் வரவேற்பைப் பெற்றது. வேகமாக இயங்கும் ப்ரொசெஸர் சிறந்த அம்சங்களுடன் கூடிய கெமரா ஆகியவை இதில் இருந்தன. ஆனால், ஒரு பெரிய மாற்றத்தைத் தந்துகொண்டிருக்கும் 'சிரி' என்னும் தொழில் நுட்பத்தினை 'அப்பிள்' நிறுவனம் இந்த போனில் கொடுத்தது. ஒலி வழியே (Voice Command) நாம் வழங்கும் கட்டளைகளைப் புரிந்துகொண்டு செயற்படுத்துவதுடன், பதில் அளிக்கவும் செய்கிறது.



'ஆண்ட்ரொய்ட்' மற்றும் 'விண்டோ' போன்களில் இந்த வகை வசதி இருந்தாலும், ஒலி வழி தருவதில் அவை பல வரையறைகளைக் கொண்டுள்ளன. ஆனால், ஐபோன் இயற்கையான மொழி வழியை எளிதில் உணர்ந்துகொண்டு செயற்படுகிறது. 'ஆர்ட்டி·ஃபிசியல் இன்டலி ஜென்ஸ்' (Artificial Intelligence) எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் திறன் இப்போது நம் பாக்கெட்டில் 'ஐ போன் 4s இல் கிடைக்கின்றது.

**✱ 'செம்ஸுங் கெலக்ஸி' போன்கள்:** ஸ்மார்ட் போன்களைத் தருவதில், ஆப்பிள் நிறுவனம் மட்டுமன்றி, செம்ஸுங் நிறுவனமும் சில சாதனைகளை ஏற்படுத்தியது. மிகக் குறைவான தடிப்புடன் ஆண்ட்ரொய்ட் சிஸ்டத்துடன் வடிவமைக்கப்பட்டு இவை வெளிவந்து சாதனையை ஏற்படுத்தின. இது எதிர்வரும் வருடங்களிலும் மேம்பாடு அடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



**✱ அப்பிள் ஐ-பேட் 2:** தடிப்புக் குறைவாக, மிகக் குறைவான எடையில், ஐ-பேட் 2 சாதனத்தை வெளியிட்டு, தன்னுடைய போட்டியாளர்களைக் கதி கலங்க வைத்தது அப்பிள் நிறுவனம். ஏனென்றால், ஏனைய நிறுவனங்கள் அப்போது தங்களுடைய 'டெப்ளட்' கணினியை எப்படி வடிவமைக்கலாம் என்பது குறித்து சிந்தித்து வந்தன. அந்த போட்டி நிறுவனங்கள் விழித்துக் கொண்டு தங்களுடைய டெப்ளட் 'பிசி'க்களைக் கொண்டுவந்தபோது, அப்பிள் டெப்ளட் கணினி என்றால் 'ஐ-பேட் 2' தான் என ஒரு பிரமிப்பை ஏற்படுத்தியிருந்தது. ஒக்டோபர் 2011 இல் இவற்றின் விற்பனை 4 கோடியை எட்டியது. இதுவொரு உலக சாதனையாகவே கருதப்படுகின்றது.





**✱ விண்டோஸ் போன்:** 2010 இல் முழுமை அடையாத ஒரு விண்டோஸ் போன் மென்பொருள் தொகுப்பினை, மைக்ரோசொ·ஃப்ட் வெளியிட்டாலும், 2011 ஆம் ஆண்டில் அது முழுமையான போன் ஆப்பரேட்டிங் சிஸ்டமாக 'விண்டோஸ் போன்' சிஸ்டத்தைக் கொண்டு வந்தது. கொப்பி எண்ட் பேஸ்ட் வசதி (Copy and Paste) ஒரே நேரத்தில் பல செயற்பாடுகளை இயக்கும் திறன், எச்.டி.எம்.அல்.5 க்கான சப்போர்ட், முன்பக்க கெமரா சப்போர்ட் ஆகியவை இதன் சிறப்பம்சங்களாக விளங்குகின்றன. நொக்கியா நிறுவனத்துடன், விண்டோஸ் போன் சிஸ்டத்துடன் போன்களைக் கொண்டுவர மைக்ரோசொப்ட் மேற்கொண்ட ஒப்பந்தம் இதனை மேலும் வேகமாக மக்களிடையே கொண்டு வர உதவியது. மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு மொபைல் உலகில் ஒரு திருப்பு முனையை விண்டோஸ்போன் ஏற்படுத்தியது.

**✱ கூகுள் ப்ளஸ்:** ஒரு வழியாக 2011 இல் பிரச்சினை இல்லாத சமுதாய தளம் ஒன்றை கூகுள் நிறுவனம் 'கூகுள் ப்ளஸ்' என்ற பெயரில் ஏற்படுத்தியது. சிறிது நாட்களிலேயே இதற்கு 4 கோடி வாடிக்கையாளர்களின் ஆதரவு கிடைத்தது. இந்த வகையில் முன்னணியில் இயங்கும் தளமான பேஸ்புக் தளத்திற்கு இணையான, போட்டியான செயலாக இது அறியப்பட்டது. ஏனைய இணையத்தளங்கள் தர முடியாத போட்டியை கூகுள் ப்ளஸ், பேஸ்புக் தளத்திற்குத் தந்தது.

**✱ கூகுள் குரோம்:** மெல்ல மெல்ல தன் நிலையை உறுதி செய்து இன்று ·ஃபயர்பொக்ஸ் பிரவுசருக்குப் போட்டியாக, அதன் இடத்தைப் பிடிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது கூகுள் குரோம் பிரவுசர். கடந்த வருடம் நவம்பர் மாதம் பிரவுசர் போட்டியில் ·ஃபயர்பொக்ஸை இது பின்னுக்குத் தள்ளியது. புதிய ஆண்டில், தன்பங்கினை மேலும் உயர்த்த பல புதிய பரிமாணங்களுடன் குரோம் பிரவுசர் பரிணாமம் அடையலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசருக்கு நிச்சயமாக குரோம் பிரவுசர் சரியான போட்டியைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஜனவரி மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 11, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org